Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :201 ஆனி 03ஆம் நாள் புதன்கிழமை 17 ஜீன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## முக்கிய தளபதிகள் பலாலியில் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

விஷேட அதிரடிப்படையின் கட்டளைத்தளபதி, பொலிஸ்மா அதிபர் கடற்படைத்தளபதி, ராணுவத் தளபதி உள்ளிட்ட உயர் தளபதிகள் யாழ்ப்பாணம் பலாலியில் இன்று காலை முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் என்ற தெரிவிக் 15

## தமிழ் மக்களின்
# வாக்குகளைச் சிதறடிப்பதே மாற்று அணிகளின் இலக்கு!
### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 17

"வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருக்கின்றது. தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்குடன் மாற்று அணி, மாற்றுத் தலைமை என்ற பெயரில் பல கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றன. 15

## கொரோனா 1,915

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 10 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி கொரோனா தொற்றிய வர்களின் மொத்த எண்ணிக்கை 1,915 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தொற்றிலிருந்து மேலும் 29 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 15

## ஆரம்பப் பாடசாலைகள் ஜூலை 1 இல் ஆரம்பம்

கொழும்பு ஜூன் 17

சுகாதார அமைச்சு வழங்கியுள்ள ஆலோசனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. ஆரம்பப் பாடசாலைகள் 15

## தமிழ் பொலிஸ் உயிர்மாய்ப்பு

கொழும்பு, ஜூன் 17

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் அலுவலர் தவறான முடிவெடுத்து உயிரைமாய்த்துக் கொண்டார் என்று 15

## கதிரையால் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு
### அல்வாயில் பரிதாபம்

வடமராட்சி, ஜூன் 17

வடமராட்சி அல்வாய் பகுதியைச் சேர்ந்த சிறுவன், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளான்.

ஜெபநேசன் சியோன் (வயது - 3) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்பு வீட்டில் கதிரையிலி 15

## தபால்மூல வாக்களிப்பு திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

தபால்மூல வாக்களிப்பு திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. அதன்படி, ஜூலை 14, 15, 16 மற்றும் 17 ஆகிய திகதிகளும் மேலதிகமாக 20,21ஆம் திகதிகளிலும் தபால்மூல வாக்க 15

## தமிழினத்தின் கவசம் போராளிகள்! அவர்களின் ஆதரவு எமக்குப் பலம்!!
### சொல்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 17

"தமிழினத்தின் பாதுகாப்புக் கவசமாக அன்று எமது போராளிகள் இருந்தார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் இன்று ஜனநாயக வழியில் செயற்படுகின்றார்கள். அந்தவகையில் ஜனநாயகப் போராளிகள் கட்சியி 15

## புதூர் நாகதம்பிரான் பொங்கலில் 80 பேரே!

வவுனியா, ஜூன் 17

பிரசித்திபெற்ற வவுனியா புதூர் நாகதம்பிரான் கோவில் வருடாந்த பொங்கல் விழாவில் 80 பேர் மாத்திரமே கலந்து 15



### யாழ்.மாநகரசபையின்
## தீயணைப்பு வாகனம் விபத்து ஒருவர் சாவு: இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாண மாநகர சபையில் இருந்து பருத்தித்துறைக்கு விரைந்த தீயணைப்பு வாகனம் நீர்வேலி அத்தியார் இந் 15

### வல்லை வெடிப்பு
## நீர்வேலி இளைஞன் ரி.ஐ.டி விசாரணையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 17

வல்லை இராணுவ முகாமுக்கு அண்மையில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பில், நீர்வேலியை சேர்ந்த இளைஞர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத 15

## கூட்டமைப்பை உடைக்கும் சதிக்குள் சிக்கக்கூடாது !
### ஜனநாயகப் போராளிகள் கட்சி அறைகூவல்

கொழும்பு, ஜூன் 17

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட ஒரே யொரு கட்சி 15

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை


ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

செலான் தங்க நகை அடகு சேவை

011 200 88 88

செலான் வங்கி



# ஒரு மாகாணத்துக்கு மட்டும் ஜனாதிபதி செயலணி ஏன்?

## அமெரிக்கத் தூதுவருக்கும் சந்தேகம்

**கொழும்பு, ஜூன் 17**

**ஒரு மாகாணத்துக்கு மட்டும் ஜனாதிபதி செயலணி எதற்கு?, மக்கள் எழுப்புகின்ற சந்தேகங்கள் எனக்கும் உள்ளன.இவ்வாறு அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கிழக்கு மாகாண தொல்பொருள் விடயங்களை ஆராய நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசேட செயலணி மக்களால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அது பன்முகத்தன்மை அற்றதாகவும் தெரிகின்றது. ஏன் இவ்வாறு ஒரு பகுதிக்கு மட்டும் தொல்பொருள் செயலணி நியமிக்கப்பட வேண்டும் என்ற

கேள்வி எனக்குள்ளும் எழுகின்றது. ஜனநாயகத்திற்கு எப்போதும் சிவில் நிர்வாகமே முக்கியத்துவமிக்கதாக அமையும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். இலங்கையானது 301 ஜெனீவா பிரேரணையிலிருந்து விலகினாலும் மனித உரிமை மீறறால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக்கூறல் மூலம் நீதியை நிலைநாட்டுவதில் தனது கடமையை நிறைவேற்றும் என்று நம்புகின்றோம்.

இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் எந்தப் பிரச்சினையுமில்லை. இலங்கைக்கு வந்த தூதரகப் பணியாளர் தொடர்பான தவறான தகவல், தூதரகத்துக்கு அருகில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டம் மீதான பொலிஸ் நடவடிக்கை என்பன, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவைப் பாதிக்கவில்லை. அமெரிக்கத் தூதரகப் பணியாளர் தொடர்பாக ஊடகத்தில் வெளியான சில அறிக்கைகள் தவறாக முன்னெடுக்கப்பட்டவை. இந்தப் பணியாளர் வருவதற்கு முன்னர், இலங்கையின் வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்ட நடைமுறையை, தூதரகம் பின்பற்றியது.

அதேவேளை, கொழும்பிலுள்ள ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே நடைபெறவிருந்த அண்மைய ஆர்ப்பாட்டத்தைத் தடை செய்யுமாறு, அமெரிக்கத் தூதரகம் கோரவில்லை. அத்துடன் எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் விரைவில் இணக்கத்துக்கு வர முயற்சிக்கின்றோம். என்றார். (எ)

# திருக்கேதீச்சர வழக்குகள் ஒக்ரோபருக்கு ஒத்திவைப்பு

திருக்கேதீச்சர கோவில் வீதி அலங்கார வளைவு உடைப்புடன் தொடர்புடைய வழக்குகள் மன்னார் மேல்நீதிமன்றில் எதிர்வரும் ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீச்சர அலங்காரவளைவுஉடைப்பு சம்பந்தமான வழக்குகளில் இரண்டு குற்றவியல் வழக்குகள் மன்னார் நீதிவான் நீதிமன்றிலும் எழுத்தாணை சம்பந்தமான வழக்கு ஒன்று மன்னார் மேல் நீதிமன்றிலும் விசாரணையில் உள்ளன.

வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதிசஹாப்தீன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

மன்னார் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மீதான வழக்கில் 23ஆம் எதிர்மனுதாரரான திருக்கேதீச்சர கோவில் இணைச் செயலாளர் எஸ்.இராம கிருஷ்ணன் சார்பிலும் 24 ஆவது எதிர்மனுதாரரான திருக்கேதீச்சர கோவில் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் சட்டத்தரணிகள் கே.சயந்தன்,எஸ்.கே.புரந்திரன், கணேசராஜன், ராகுல், புராதனி, தர்மராஜ் வினோதன் ஆகியோர் மன்றில் முற்பட்டனர்.

எதிர் மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரியான்சி அரச குலரெட்ண முன்னிலையா னார். ஒன்று தொடக்கம் 22 வரையான எதிர்மனுதாரர்களான மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் சார்பில் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் முற்பட்டார். வழக்கின்படி எதிர் மனுதாரர்களின் 'தலையங்கம்' திருத்துவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது. தலையங்கம் திருத்தியதன் பின்பு திருத்தப்பட்ட தலையங்கத்துக்கு ஆட்சேபனை அளிப்பதற்காக 23ஆம் 24ஆம் எதிர்மனுதாரர் சார்பில் ஆட்சேபனை அணைப்பதற்கு எதிர்வரும் 13ஆம் திகதியும், அதற்குரிய மறு ஆட்சேபனையை மனுதாரர்கள் சார்பில் அமைப்பதற்கு ஓகஸ்ட் 26ஆம் திகதியும் வழங்கப்பட்டுள்ளது.திருக்கேதீச்சர வீதி அலங்கார வளைவு உடைப்பு சம்பந்தமான முழு வழக்கையும் விவாதிப்பதற்காக ஒக்ரோபர் 26ஆம் திகதியிடப்பட்டுள்ளது.மேலும் நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பொலிஸார் மேலதிக அறிக்கைகள் தாக்கல் செய்தனர். அதன்மீது குற்றச்சாட்டுப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்காகவும் ஒக்ரோபர் மாதத்துக்கு தவணை வழங்கப்பட்டுள்ளது. (த-213)

# 8 பேர் கைது

**கொடிகாமம், ஜூன் 17**

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கைகளின்போது கசிப்பு பனஞ்சாராயம் மற்றும் கெரோய்ன் போதைப் பொருள்களுடன் சுமார் 8க்கும் மேற்பட்டோர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகரப் பகுதி, கொக்குவில் மற்றும் பொம்மை வெளி ஆகிய பகுதிகளில் யாழ் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது குறித்த குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-159)

# தேர்தல்கள் ஆணைக்குழு கோத்தாவுடன் நாளை பேச்சு

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் ஒகஸ்ட் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (ஒ.5,105)

# ஊடகவியலாளரின் கணினியை பிடுங்கிச் சென்றது சி.ஐ.டி.

## பகுப்பாய்வுக்கு நீதிமன்றம் உத்தரவு

ஊடகவியலாளரின் வீட்டைச் சோதனைக்கு உட்படுத்தி, மடிக்கணினியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி.) எடுத்துச் சென்றுள்ளதாக சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும், நியூயோர்க் ரைம்ஸின் கொழும்புச் செய்தியாளருமான தரீஷா பெஸ்டியன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்றி வீட்டைப் பரிசோதிக்க வந்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தமது மடிக்கணனியை எடுக்க முயற்சித்ததாகவும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பின்னர் நீதிமன்ற உத்தரவுடன் வந்து வீட்டை சோதனைக்குட்படுத்தி, மடிக்கணினியை எடுத்துச் சென்றதாக ஊடகவியலாளர் தரீஷா தெரிவித்தார். அதற்கு முன்னர் தனது தொலைபேசி அழைப்புகள் குறித்த தகவல்களை எவ்வித நீதிமன்ற உத்தரவுகளும் இன்றி பெற்றுக்கொண்டு, அவற்றை வெளிப்படுத்தியுள்ளதால் செய்தி மூலங்கள், தொடர்புகள் பாதிப்புக்குள்ளாகக் கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த கையோடு, சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் ஒருவர் கடத்தப்பட்டமை தொடர்பில் தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளில் எனது பெயரும் தொடர்புபட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்பாக, எனது இலத்திரனியல் உபகரணங்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எனது உதவியாளர்கள் மற்றும் நண்பர்களிடம் விசாரணை செய்துள்ளனர்.

கடந்த மே 29ஆம் மற்றும் ஜூன் 4ஆம் திகதிகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பில் உள்ள எனது வீட்டுக்கு வந்து, உத்தரவுகள் எதுவுமின்றி எனது மடிக்கணினியை கையகப்படுத்த முயற்சி செய்தனர். நீதிமன்ற உத்தரவுகள் இன்றி மடிக்கணினியை வழங்க முடியாதென்று குடும்பத்தினரும் தெரிவித்தனர்.

ஜூன் 9ஆம் திகதி இரகசிய பொலிஸ் அதிகாரிகள் ஐவர் நீதிமன்ற உத்தரவுடன் வந்து எனது கொழும்பு வீட்டை சோதனைக்குட்படுத்தினர். படுக்கையறை உட்பட முழு வீட்டையும் சோதனைக்குட்படுத்தினர். அனைத்தையும் ஒளிப்படமெடுத்தனர். எனது மடிக்கணினியை கையகப்படுத்தி சீல் வைத்தனர்.

முறையான அனைத்து பரிசோதனைகளுக்கும் நான் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே இருக்கின்றேன். எனது கணினியில் தவறான எதவும் இருக்காது என்பதே எனது நம்பிக்கை. எனினும், எமது மடிக்கணினி உட்பட கையகப்படுத்தப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களில் உள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்ள, இந்தச் சம்பவத்தில் ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர் எடுக்கும் முயற்சிகள் குறித்து நான் அவதானமாகவே இருக்கின்றேன். ஊடகவியலாளராக நான் எனது பணிக்காக இந்த உபகரணத்தையே பயன்படுத்தினேன் என்பதால், குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொறுப்பில் உள்ள எனது மடிக்கணினி குறித்து உரிய சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படும் என்று இலங்கையின் நீதிமன்றங்களில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன், என்றார். இதேவேளை சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்ட வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் இன்று நடைபெற்றது. நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே கணினியைக் கையகப்படுத்தியதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ஒ.5)



# இன வெறியில் கோத்தா அரசு

### ஐ.தே.க வேட்பாளர் குற்றச்சாட்டு

மன்னார், ஜூன் 17

தற்போதைய அரசாங்கம் எங்களுடைய மக்களின் உரிமைகளை மறுத்து இன்று அவர்களுடைய அமைச்சர்கள் தமிழர்களுடைய வாக்குகள் தேவையில்லை, முஸ்லிம்களுடைய வாக்குகள் தேவையில்லை என்று சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக உயர்ந்த ஓர் இன வெறித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட தலைமை வேட்பாளர் ஜே.பிரிம்லஸ் கொஸ்தா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், வேட்பாளருமான ஏ.சமியு முஹம்மது பஸ்மி தலைமையில் மன்னாரில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் வடகிழக்கு மக்களுக்கும் , தமிழ் மக்களுக்கும் அவர்களுடைய ஜனநாயக உரிமைகளை வழங்கி அவர்களுடைய தேவைகளை கடந்த காலங்களில் நிறைவேற்றி வந்துள்ளனர். தற்போதைய அரசாங்கம் எங்களுடைய மக்களின் உரிமைகளை மறுத்து இன்று அவர்களுடைய அமைச்சர்கள் தமிழர்களுடைய வாக்குகள் தேவையில்லை, முஸ்லிம்களுடைய வாக்குகள் தேவையில்லை என்று சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக உயர்ந்த ஓர் இன வெறித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் இந்தத் தேர்தல் களத்திலே எங்களுடைய ஐக்கிய தேசியக் கட்சியின் அணி ஓர் ஒழுக்கமான தேர்தல் முறையை கடைப்பிடிக்கவுள்ளது. தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகளின் வேட்பாளர்களையும் கௌரவமான முறையில் மதிப்பது, அவர்களுக்கு எதிரான அரசியல் சூழ்ச்சிகளுக்கான விமர்சனங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல், பண்பான முறையில் தேர்தல் கடமைகளை முன்னெடுப்பது தொடர்பாக எமது வேட்பாளர்களுக்கு நாம் கட்டளையிட்டுள்ளோம்- என்றார்.


(ப-56)

# துயிலும் இல்லத்துக்கு வர மறுத்தவர் தம்பி பிரபாகரன் என உருகுகின்றார்

### தேர்தலுக்கான நாடகம் என்று விக்கியை மறைமுகமாகச் சாடுகின்றார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 17

தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கு விடுதலைப் புலிகளின் எதிர்ப்பாளர்கள் இன்று புலிவேடம் போட ஆரம்பித்திருக்கிறார்கள். நான் மாகாண சபையில் பதவி வகித்த காலப் பகுதியில், ஒவ்வொரு மாவீரர் தினத்தின்போதும் மாகாண சபையின் மிக முக்கிய பொறுப்பில் இருந்த ஒரு தலைவரை அணுகித் துயிலும் இல்லத்துக்கு வருமாறு கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் அவர் மறுத்திருக்கிறார். ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாத அவர், துயிலுமில்லத்தில் கால் வைக்க விரும்பவில்லை. ஆனால், இன்று தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்துத் தம்பி பிரபாகரன் என்று உருகி உருகிப் பேசுகிறார்.



இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சைக் குழுவாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது. இந்தத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மகளிர் அணியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர்களுடனான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப் புலிகள் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் போராட்ட அடையாளம், மாவீரர்கள் எந்நாளும் போற்றுதற்குரியவர்கள். ஆனால், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அவர்களைக் கண்டுகொள்ளாமல் விட்ட அரசியல்வாதிகளும், விடுதலைப் புலிகளும் போர்க் குற்றம் இழைத்தார்கள் என்று சொல்லிச் சர்வதேச அரங்கில் இலங்கை அரசைப் பிணை எடுத்த அரசியல்வாதிகளும், விடுதலைப் புலிகளை அரச படைகளுடன் இணைந்து தேடித்தேடி வேட்டையாடிய அரசியல்வாதிகளும் இன்று தேர்தல் வந்ததும் புலிகளின் புகழ்பாட ஆரம்பித்திருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் மட்டும் விடுதலைப் புலிகளின் புகழ்பாடுவது கடைந்தெடுத்த அரசியல் அயோக்கியத்தனம்.

ஆயுதப்போராட்டம்முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட ஒரு தசாப்த காலத்துக்குள் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களும், இரண்டு உள்ளூராட்சிசபைத் தேர்தல்களும், ஒரு மாகாண சபைத் தேர்தலும் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இத்தேர்தல்களில் தங்களை ஒரு தரப்பாக இணைத்துக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியம் பேசுகின்ற பெரிய கட்சிகளுடன் போராளிகள் தரப்பில் பேச்சு நடந்த போதும் அது சாத்தியமாகவில்லை. எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குமோ தெரியாது என்று சொல்லி அவர்களை அரவணைக்க மறுத்தவர்கள், இப்போது போராளிகளை அரசியலில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் போராளிகளின் தியாகத்தைத் தங்களது அரசியல் இருப்புக்கான மூலதனமாக ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறு நடந்துகொள்ளாது. விடுதலைப் போராளிகள் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்காகப் போராடியவர்கள். அவர்களின் இலட்சியங்கள் நிறைவேற உழைப்பதுதான் எமது குறிக்கோளாக இருக்கவேண்டுமேயில்லாமல், அவர்களின் தியாகங்களில் எங்களை வளப்படுத்துபவர்களாக இருக்கமுடியாது. இதனைத் தமிழ்த் தேசியப்பசுமைஇயக்கத்தின்இணைப்பாளர்கள், வேட்பாளர்கள் யாவரும் நினைவில் இருத்தியவாறே தேர்தல் காலக் களப்பணிகளை ஆற்றவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழந்தார்

வவுனியா,ஜூன் 17

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்றுச் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்

முதியவர் மாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானர்.

விபத்தில் காயமடைந்தவர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இராசையா தியாகராசா (வயது-64) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

(க-110)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனங்கள் பறிப்பு

கிளிநொச்சி, ஜூன் 17

அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்து ஏற்றின என்று டிப்பர் மற்றும் உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகள் நால்வர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் மணல் அகழ்ந்து ஏற்றிய இரு டிப்பர் மற்றும் உழவு இயந்திரம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணையின் பின்னர் சாரதிகளுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டது. டிப்பர், உழவு இயந்திரங்கள் என்பன பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வாய்க்காலில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றிய இரு உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணையின் பின்னர் அவர்களுக்கும் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது. உழவு இயந்திரங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (ப-6)

# சஜித் அணிதான் ஆட்சியமைக்கும்

### முன்னாள் அமைச்சர் ஹலீம் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 17

எமது நாட்டு மக்களின் ஆதரவை பெரியயவில் பெற்றுள்ள சஜித் பிரேமதாச தலைமையில் களமிறங்கியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி இந்த முறை பொதுத் தேர்தலில் ஆட்சி அமைக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

கண்டி மாவில்மடையில் அமைந்துள்ள அவருடைய அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையானோர் இன்று ஐக்கிய மக்கள் சக்தியுடனே இருக்கின்றனர். எமது வேட்பாளர்களைப் பார்த்தால் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அரசியலில் முதிர்ச்சியடைந்தவர்கள், அனுபவம் மிக்கவர்கள் என பலர் இருக்கின்றனர்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் நாங்கள் நாட்டில் பெரும்பான்மை ஆசனங்களைப்பெற்று இந் நாட்டில் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவோம். சஜித் பிரேமதாச பிரதமராக பதவி ஏற்று ஒரு புதிய அரசை அமைப்போம் - என்றார். (ப)

# இந்திய மீனவர்கள் மூலமாக கொரோனா தொற்ற வாய்ப்பு

## வடக்கு மாகாண ஆளுநருக்கு பதில் முதல்வர் கடிதம்

**யாழ்ப்பாணம், ஜூன் 17**
**இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி மூலம் மீண்டும் கொரோனாத் தொற்று பரவ வாய்ப்புண்டு. அதனால் எம்மவர்களின் வாழ்வாதாரமும் சுரண்டப்படுகின்றது என மாநகர பதில் முதல்வர் து.ஈசன் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**



அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
இந்திய மீனவர்கள் வடக்கின் கடல் எல்லைப் பரப்புக்குள் அதிலும் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக மீன்பிடியை மட்டும் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்துவரும் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றமையுடன், தமது வருமானங்களை இழந்து மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுகின்றன.
இந்தியாவில் தற்பொழுது கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருவதனை நாம் அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் கொரோனாத் தொற்றுக் குறைந்து சுமுகமான நிலையை நோக்கி நகரும் எமது மக்களின் வாழ்வில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் மூலம் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துவிடுமோ என்ற அச்சம் தோன்றுகின்றது. எனவே மேற்படி விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயங்களில் தங்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம-105)

# வரணி ஆலயத் திருட்டு; மூன்றாவது நபரும் மறியலில்

சாவகச்சேரி, ஜூன் 17
வரணி கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டு தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்றாவது நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
குறித்த ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கோவில் கலசங்கள், தங்கச்சங்கிலி மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டிருந்தன. இந்தத் திருட்டின் மூன்றாவது சந்தேக நபர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாள்கள் மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ம-9)

# பரந்தனில் கடை உடைப்பு சந்தேகநபர் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 17
பரந்தன் பகுதியில் உள்ள நான்கு கடைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கிளிநொச்சி பரந்தன் சந்தைப் பகுதியில், நான்கு சிறிய வர்த்தக நிலையங்கள் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளன. சந்தைப் பகுதியில் இயங்கி வரும் சிறிய பல்பொருள் வாணிபம், வெற்றிலை வாணிபம், பழக்கடை உள்ளிட்ட 4 கடைகளே உடைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஜசிந்தன் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். களவாடப்பட்ட பொருள்களில் 8 பண்டல் சிகரெட்டும் 2 பண்டல் பீடியும் யாழ்ப்பாணத்தில் மீட்கப்பட்டுள்ளன. அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல கடைகள் உடைக்கப்பட்ட சம்பவத்தில் தொடர்புள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர் (ம-6)

# மன்னார் பிறீமியர் லீக் விரைவில் ஆரம்பமாகும்

எதிர்வரும் வாரங்களில் மன்னார் பிறீமியர் லீக் ஆரம்பிக்கப்படும் என்று மன்னார் கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஞா.அன்ரன் டேவிட்சன் தெரிவித்தார்
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னார் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையில் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட எம்.பி.எல் போட்டியில் பத்து கழகங்கள் பங்குபற்றி அரைவாசிப் போட்டிகள் நிறைவுற்ற நிலையில் கொரோனா வைரஸ் பிரச்சினையால் மார்ச் 20ஆம் திகதி தற்காலிகமாக ஆட்டங்கள் நிறுத்தப்பட்டன. தற்போது கொரோனா வைரஸின் பிடியில் இருந்து நாடு ஓரளவு வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் தொடர் விரைவில் ஆரம்பமாகும் என்றார். (ம-213)

# முல்லை. பொலிஸாரின் தாக்குதல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை!



முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு முள்ளிவாய்க் கால் பகுதியை சேர்ந்த மூவர் மீது முல்லைத்தீவு பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் விசாரணை இடம்பெற்றது.
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதிகளைச் சேர்ந்த 3 நபர்கள் மீது முல்லைத்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகள் கடந்த மே மாதம் 6ஆம் திகதி இரவு தாக்குதல் நடத்தினர் என்று தாக்குதலுக்கு உள்ளானவர்களால் தெரிவிக்கப்பட்டது.
ஒரு நபருடைய பெயரைக் கேட்டு அவர் எங்கே என்றும் அவரை கொண்டுவந்து உடனடியாக ஒப்படைக்குமாறு கோரியுமே தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று பாதிக்கப்பட்டோர் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணை முற்றுப்பெறாத நிலையில் இரண்டாம் கட்ட விசாரணைக்காக எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் சமூகமளிக்குமாறு மனித உரிமை ஆணையகத்தால் இரு தரப்புக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-19,110)



# நீரிறைக்கும் இயந்திரங்களை திருடினர் என நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளுக்குள் நுழைந்து நீர் இறைக்கும் இயந்திரங்களை திருடினர் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நால்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-20)

# வடமாகாண விருதுகளுக்கு விண்ணப்பத் திகதி நீடிப்பு!

மன்னார், ஜூன் 17
வடக்கு மாகாண விருதுகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக மன்னார் கலைப்பண்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில் இந்தத் திகதி நீடிப்புத் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கலைக்குரிசில் விருது, இளங்கலைஞர் விருது, சிறந்த நூல் பரிசு, நூல் கொள்வனவு ஆகியவற்றின் நிமித்தம் விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி கடந்த மார்ச் மாதம் 31 என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு விண்ணப்பத் திகதி இந்த மாதம் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ம-213)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அடுத்த குழப்பம் ஆரம்பம்

தேர்தல் திகதி பற்றிய குழப்பங்கள் தீர, இப்போது உயர்தரப் பரீட்சைகள் எப்போது என்ற அடுத்த குழப்பம் ஆரம்பமாகி விட்டது. கொரோனா அச்சத்தால் நாடு முடக்கப்பட்டிருந்த போது கூட, உயர்தரப் பரீட்சை திட்டமிட்ட திகதியில் நடக்கும் என்று அரசு ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் பின்னர் செப்ரெம்பர் 7ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திகதியிலும் பரீட்சை நடப்பது சந்தேகமே என்று பலதரப்புக்களும் தர்க்க நியாயத்தை விளக்கியபோது, பரீட்சைத் திணைக்கள ஆணையாளரோ ஒருபோதும் இனி பரீட்சை நடைபெறும் நாளில் மாற்றம் வராது என்றார். மாற்றம் ஒன்றுதானே மாறாதது. இப்போது அந்தத் திகதியிலும் பரீட்சை நடைபெறாது என்றும், பாடசாலைகள் ஆரம்பித்து ஒரு வாரத்தின் பின்னரே மிகச் சரியான நாளை நிர்ணயிக்க முடியும் என்றும் புதிய அறிவிப்பு வந்திருக்கிறது.

உயர்தரப் பரீட்சையைப் பிற்போடுமாறு கோரப்படுவதில் பல நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. கடந்த வருடம் ஈஸ்டர் குண்டு வெடிப்புகளாலும், இந்த வருடம் கொரோனாவாலும் உயர்தர மாணவர்கள் தமது பாடத்திட்டத்தைச் சரிவரப் பூர்த்திசெய்யவில்லை. என்னதான் ‘சூம்’, தொலைக்காட்சியூடான கற்பித்தல் என நடந்தாலும் அவையெல்லாம் உரிய வகையில் மாணவர்களைச் சென்றடைந்தனவா என்பதும் கேள்விக்குறியே. அத்தோடு ஈஸ்டர் தாக்குதல், கொரோனா ஆகிய இரு அசாதாரண சூழ்நிலைகளும் மாணவர்களிடத்தே உளவியல் ரீதியாகவும் மிகப்பெரும் பாதிப்புகளை உண்டுபண்ணியுள்ளன. எனவே பரீட்சையை எழுதக் கூடியவாறான மனோநிலையை எய்துவதோடு, பாடத்திட்டங்களையும் பூர்த்தி செய்து பரீட்சைக்குத் தயாராவதற்கு மாணவர்களுக்கு சில மாத அவகாசமேனும் தேவை.

அதைவிட செப்ரெம்பரில் உயர்தரப் பரீட்சைகளை வைத்தால், பரீட்சை நடைபெறும் பாடசாலைகளை மூடவேண்டியிருக்கும். அதன் பின்னர் டிசெம்பரில் சாதாரண தரப் பரீட்சைகளின்போதும்பாடசாலைகளைமூடவேண்டும். ஏற்கனவே கொரோனாவால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் சில மாதங்கள் வீணடிக்கப்பட்டுவிட்டன. இந்தநிலையில் அடுத்தடுத்து பரீட்சைகளுக்காக இன்னும் இரு மாதங்கள் பாடசாலைகள் மூடப்பட்டால் கற்றல் நடவடிக்கைகளில் இன்னும் தேக்கநிலையே உண்டாகும். இதனைத்தவிர்க்க வேண்டுமானால் டிசெம்பரில் உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை என்பனவற்றை நடத்துதலே பொருத்தமானதாக இருக்கும். மாணவர்கள் தங்கள் உளநலனைத் திடமாக்கி, பாட அலகுகளைக் கற்றுத் தேர்ந்து கொள்ள கால அவகாசம் கிடைப்பதுடன், கற்றல் நடவடிக்கைகளுக்கான காலத்தை நீட்டிப்பதற்கான சந்தர்ப்பமும் உண்டாகும். அரசு இவற்றைக் கவனத்திற்கொண்டு மிகச்சரியான முடிவை எடுக்கவேண்டும்.

# இலங்கைக்கான கடனை நிறுத்தியுள்ளது ஜப்பான்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 17**

**கொவிட் தொற்றின் பின்னர் நாட்டிலுள்ள பிரஜைகள் மாத்திரமின்றி அரசாங்கமும் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரம் தொடர்பில் ஏற்பட்ட அவநம்பிக்கையின் காரணமாக ஜப்பான் வழங்கவிருந்த கடன் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று ஜாதிக ஹெல உருமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் தொற்றுக்கு பின்னர் நாட்டில் அனைத்துப் பிரஜைகளும் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். அனைவருக்கும் வருமானம் அற்றுப் போயுள்ளது.

பெரும்பாலானவர்களுக்கு தொழில் அற்றுப் போயுள்ளது. தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதில் கூட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு மத்தியில் நாட்டில் மருந்து தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. பணம் கொடுத்தேனும் மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

அதேபோன்று வங்கிகளிலும் லீசிங் கம்பனிகளிலும் பல்வேறு தேவைகளுக்காக கடன் பெற்றவர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். இவற்றினடிப்படையிலான மிக மோசமான சம்பவமாக சுனில் ஜயரத்னவின் இறப்பை நாம் பார்க்கின்றோம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்குவதில்லை. ஆனால் அரச அதிகாரிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இதனால் அரசாங்கத்தின் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி அற்றுப் போயுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்தபோது கடனை மீளச்செலுத்துவதற்கு மூன்று வருட கால அவகாசம் கோரியிருந்தார். நாட்டுக்கு கடனை மீளச்செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் சுமார் 70 வருடங்கள் இலங்கைக்கு பெருமளவிலான உதவிகளைச் செய்துள்ள ஜப்பான் இம்முறை வழங்கவிருந்த கடனை இடைநிறுத்த தீர்மானித்துள்ளது - என்றார். (ப)

# பாதயாத்திரை செல்லத் தடை;

## கோத்தாவுக்கு யோகேஸ்வரன் கடிதம்

மட்டக்களப்பு, ஜூன் 17

கொரோனா தொற்று பரவல் காரணமாக சுகாதார விதி முறைகளைப் பேணுதலைக் கருத்திற்கொண்டு இம்முறை கிழக்கிலிருந்து பாதயாத்திரை செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவருமாகிய சீனித்தம்பி யோகேஸ்வரன் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது;

இலங்கையில் முருகப்பெருமான் குடிகொண்டு திருவருள் பாலிக்கும் முக்கிய தலமாகக் கருதப்படும் கதிர்காம முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் இந்து தமிழ் மக்களும், சிங்கள மக்களும், பாதயாத்திரையாக செல்வது பல்லாண்டு காலமாக நடத்தப்பட்டு வருகின்றது.

பெரும்பாலும் அடியார்கள் தங்களது நோக்கங்கள், துன்பங்கள், அவசியத் தேவைகளை வேண்டுதல் செய்து நேர்த்தி வைத்து அது நிறைவேறியதும் தமது பாதயாத்திரையை பக்தி பூர்வமாக மேற்கொள்கின்றனர். இவ்வடியார்களில் ஒருவராக முருகனும் செல்வார் என்பது நீண்டகால நம்பிக்கை. பல அற்புதங்களும் பாதயாத்திரை செல்லும் அடியார்களுக்கு நிகழ்ந்துள்ளது. இவ்வேளை இக்கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுகாதார நிலையைப் பேணும் அவசியத்தின் நிமித்தம் இம்முறை கிழக்கில் இருந்து பாதயாத்திரை செல்லும் அடியார்களுக்கு தடை விதிக்கப்பட்டதாக அறிகின்றோம். இவ்விடயமாக தாங்களும் அறிவித்தல் விடுத்துள்ளீர்கள் என்பதையும் அறிவோம். ஆனால் இப் பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் தாங்கள் இம்முறை யாத்திரை செல்வது தடைப்பட்டால் தங்களுக்கு இதன் மூலம் பாதகமான சம்பவங்கள் ஏற்படலாம் என கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தயவுசெய்து தாங்கள் கிழக்கின் கதிர்காம பாத யாத்திரிகர்களுக்கு விடுத்துள்ள தடையை மீள்பரிசீலனை செய்து சகல சுகா தார அறிவுறுத்தலின் கீழ் இப் புனித கதிர்காம ஆன்மீகப் பாதயாத்திரை நடத்துவதற்கு உதவுமாறு கதிர்காம யாத்திரை மேற்கொள்ளும் அனைத்து அடியார்கள் சார்பாகவும் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை தங்களை அன்பாக வேண்டிக் கொள்கின்றது - என்றுள்ளது. (ப)

## கஜமுத்தோடு ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 17

கஜமுத்து எனப்படும் யானை தந்தத்திலிருந்து கிடைக்கும் முத்துக்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றிரவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரசன்கஸ்வெவ வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பரசன்கஸ்வெவ பொலிஸ் உத்தியோகத்தர்கள், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை வழிமறித்துச் சோதனையிட்டுள்ளனர். இதன்போது விற்பனைக்காக கொண்டு சென்ற 6 கஜமுத்துகளுடன் சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-ரி1)



# இன்னும் சில வாரங்களில் கொரோனா 2ஆவது அலை

## எச்சரிக்கின்றார் மஹேந்திர பாலசூரிய

கொழும்பு ஜூன் 17

**சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாமல் அதிகமானவர்கள் செயற்பட்டு வருகின்றனர். ஒரு சிலரின் பொறுப்பற்ற இந்தச் செயலால் கொரோனா இரண்டாம் கட்ட அலை ஏற்படும் அபாயம் இருக்கின்றது எனப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் கொரோனாத் தொற்று தாக்கம் குறைவடைந்துவரும் நிலையில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும் கொரோனாத் தொற்றுக்கான அச்சுறுத்தல் முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் மக்கள் பொது இடங்களில் நடமாடும் போது பின்பற்றவேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. என்றாலும் பெரும்பாலானவர்கள் இவற்றை மறந்து செயற்படுகின்றனர்.

அத்துடன் தனிமைப்படுத்தல் சட்டத்தை வர்த்தமானிப்படுத்துமாறு நாங்கள் அரசிடம் கேட்டிருந்தோம். ஆனால் இதுவரை அது இடம்பெறவில்லை. முகக் கவசங்களைப் பயன்படுத்திவிட்டு கண்ட இடங்களில் கைவிட்டுச்செல்கின்றனர். இது மிகவும் ஆபத்தான விடயமாகும். இவற்றை துப்புரவு செய்யும் பணியாளர்கள் எடுத்துச் செல்கின்றனர். அவர்களுக்கு கொரோனா தொற்றும் அபாயம் இருக்கின்றது. பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்களை குப்பைத் தொட்டிகளில் போடுவதில்லை. ஒரு சிலரின் பொறுப்பற்ற நடவடிக்கையால் இன்னும் சில வாரங்களில் கொரோனா இரண்டாம் அலை ஏற்படும் அபாயம் இருக்கின்றது- என்றார். (எ-ரி1)

# மொட்டின் பிரசாரங்கள் ஜூலையில் தீவிரமாகும்

## அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

21 தேர்தல் மாவட்டங்களின் தொகுதி அமைப்பாளர்களை உள்ளடக்கிய தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் மாதம் இடம்பெறும். எமது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கலந்துக் கொள்வார். ஜனாதிபதியின் நோக்கங்களைச் செயற்படுத்தும் நாடாளுமன்றம் நிச்சயம் ஸ்தாபிக்கப்படும். இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடத்தப்படும். குருநாகல், கம்பஹா ஆகிய பிரதேசங்களில் பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் கடைப்பிடித்த புதிய தேர்தல் பிரசார நடவடிக்கைகளையே பொதுத் தேர்தலிலும் கடைப்பிடிக்கும். சுற்றாடல் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 21 தேர்தல் மாவட்டங்களில் உள்ள தொகுதி அமைப்பாளர்களை ஒன்றிணைத்து பாதுகாப்பான தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் மாதம் நடத்தப்படும். இக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கலந்து கொள்வார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்தும் நிலையான அரசாங்கம் தோற்றம் பெறுவது அவசியமாகும். ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உண்டு.

எதிர்த் தரப்பினர் அரசியல் ரீதியில் பலவீனமடைந்துள்ளார்கள். நடப்பு நிலவரங்களை கருத்திற்கொண்டு மக்கள் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுப்பார்கள் - என்றார். (ப)



# தமிழ்க் கூட்டமைப்பை பலப்படுத்த முன்னாள் போராளிகளுடன் சந்திப்பு

## மட்டு. சென்றார் மாவை

மட்டக்களப்பு, ஜூன் 17

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுக்கும், மட்டக்களப்பைச் சேர்ந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. மட்டக்களப்பு, வெல்லாவெளியில் உள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமாகிய ஞா.சிறிநேசனின் ஏற்பாட்டில் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா உட்பட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் இரா. சாணக்கியன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் கி.சேயோன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கே.சாந்தன் உட்பட கட்சியின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் முகமாக ஜனநாயகப் போராளிகள் கட்சியினால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பிலும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் போராளிகளின் வாழ்வாதார முன்னேற்றம், அவர்களின் அரசியற் பிரவேச முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

"போராளிகளின் தியாகமானது உன்னதமானது, எவராலும் எண்ணிப்பார்க்க முடியாத விடயம். அவர்களின் தியாகங்களை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம். அந்த தியாகத்தின் மீதுதான் நாங்களும் எழுந்து நிற்கின்றோம். எனவே போராளிகள் போராடியதும், நாங்கள் வாதாடியதும் வீண்போகவில்லை. நாங்கள் ஒருபோதும் சோரம் போகமாட்டோம்" என்று சந்திப்பின்போது மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ப-150)

# தேர்தலின் பின் இமயமலைக்கு செல்வாராம் சஜித் பிரேமதாச

## ரணில் ஆதரவு அணி கிண்டல்

கொழும்பு, ஜூன் 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவைக் கைப்பற்றப்போவதாக கூளுரைக்கும் சஜித் பிரேமதாச, பொதுத்தேர்தலின் பின்னர் நிச்சயம் இமயமலைக்கு சென்றுவிடுவார் என்று ரணில் ஆதரவு அணி உறுப்பினரான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். பொதுத்தேர்தலின் பின்னர் சிறிகொத்தவின் பொறுப்பையும் ஏற்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள அறிவிப்புத் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ரங்கே பண்டார இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வி அடைந்ததும் சஜித் பிரேமதாச திடீரெனக் காணாமல்போனார். இறுதியில் அவரை யாலவனத்திலேயே காணக்கூடியதாக இருந்தது. இம்முறை பொதுத்தேர்தல் முடிந்ததும் அவரை இமயமலையில்தான் தேடவேண்டிவரும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு, பிரதிவாதியான கட்சி ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவே. அதனை வீழ்த்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றுவதே எமது இலக்கு.

ஆனால், சஜித் அணியின் இலக்கு என்னவாக இருக்கின்றது. சிறிகொத்தவைக் கைப்பற்றபோகின்றார்களாம். சிறிகொத்தவைக் கைப்பற்றுவோம் என்றெல்லாம் கூறப்படுவது நகைச்சுவைமிக்க அறிவிப்பாகும்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாசவின் காலைவாரும் வகையில் ரணில் விக்கிரமசிங்க செயற்படவில்லை. சஜித்தை வெற்றிபெற வைப்பதற்காக தீவிர முயற்சியில் இறங்கினார். தோல்வியடைந்த பின்னரே தலைவர்மீது தற்போது பழி சுமத்துகின்றனர்.

எனவே, அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடுவதற்கு பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கின் றேன் றேன்- என்றார். (ப-44)

# அரசியல் கட்சியின் இணைப்பாளர் உள்ளிட்ட இருவருக்கு விளக்கமறியல்

## குழப்பம் விளைவித்தனர் எனக் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 17

வவுனியா ரயில் நிலைய அதிபரை அச்சுறுத்தினார் எனத் தெரிவித்து, அரசியல் கட்சி ஒன்றின் இணைப்பாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ரயில் நிலையத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட அரசியல் கட்சி ஒன்றின் இணைப்பாளர் உட்பட இருவர் அங்கு கடமையிலிருந்த ரயில் நிலைய பணியாளர்களுடன் தகாதவார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். முரண்பாடுகளை ஏற்படுத்தி ரயில் நிலைய அதிபரை அச்சுறுத்தி அவர்களது கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்று தெரிவித்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த நபரைக் கைது செய்யாவிட்டால் ரயில் நிலையப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தனர்.

இதையடுத்தே இவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது இருவரையும் ஒரு நாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-110)

# நாட்டில் நாகரிகம் சிதைவடைகிறது

## கரு ஜயசூரிய கவலை

கொழும்பு,ஜூன் 17

**நாட்டில் தற்போது அதிகரித்துவரும் கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சம்பவங்களும், அவை தொடர்பில் சமூகத்தின் எதிர்வினைகளும் மிகப்பழமை வாய்ந்த நமது நாகரிகக் கட்டமைப்பு சிதைவுற்று வருவதையே வெளிப்படுத்துகின்றன என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கவலை வெளியிட்டுள்ளார்.**



நாட்டில் அண்மைக்காலமாக கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களின் அதிகரித்த போக்கு தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் மேலும் பதிவிட்டுள்ளதாவது:

பட்டப் பகலில் இடம்பெறும் தொழிற்சங்கத் தலைவர்களின் படுகொலைகள், சிக்காகோ பாணியிலான துப்பாக்கிச்சூடுகள், போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் மற்றும் இவை தொடர்பில் சமூகத்தில் நிலவும் உணர்ச்சியற்ற தன்மை உள்ளிட்ட அனைத்தும் எமது சமூகத்தின் மிகப்பழமை யான நாகரிகம் படிப்படியாக சிதைவடைந்து வருவதையே வெளிப்படுத்துகின்றன. நாம் நமக்குள்ளும், இந்த உலகத்தின் மத்தியிலும் மீண்டும் எழுந்து நிற்பதற்கு தேசிய ரீதியில் நாமனைவரும் ஓர் உள்ளகத் தேடலில் ஈடுபடுகின்றமை மிகவும் இன்றியமை யாததாக மாறியிருக்கின்றது.நாட்டில் இடம்பெறும் இத்தகைய ஈவிரக்கமற்ற செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்- என்றுள்ளது. (க)

# சாந்தி, சத்தியலிங்கம் வற்றாப்பளையில் வழிபாடு

முல்லைத்தீவு, ஜூன் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோர் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களுடைய தேர்தல் பிரசாரத்துக்குரிய விளம்பர அட்டைகள் பூசையில் வைக்கப்பட்டு விசேட வழிபாடுகள் இடம்பெற்றன இந்த விசேட வழிபாடுகளில் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்ராசா லோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ப-246)

# இந்தியர்கள் 153 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் இருந்த இந்தியர்கள் 153 பேர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாவை மேற்கொள்ள வருகைதந்து கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டுக்கு திரும்ப முடியாமல் இருந்த 153 பேரே நாடு திரும்பினர்.

இந்திய விமான சேவைக்குச் சொந்தமான ஏ.ஐ. 1202 என்ற சிறப்பு விமானத்தின் மூலம் இவர்கள் நேற்றுக் காலை 10.15 மணியளவில் இந்தியா நோக்கி பயணித்தனர்.

இவ்வாறு இந்தியாவுக்கு சென்ற பயணிகள் விமான நிலையத்துக்கு அருகில் உள்ள தற்காலிக விடுதிகளில் 7 நாள்கள் தங்கவைக்கப்பட்டு பின்னர் அவர்களது வீடுகளில் 7 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# ஐந்தரை மாதங்களில் 800 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 17

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு கடந்த ஐந்தரை மாதங்களில் 800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 550 முறைப்பாடுகள் தனிமைப்படுத்தல், ஊரடங்கு காலத்தில் மின் கட்டணம் அதிகரிப்பு தொடர்பானவை என்று பயன்பாட்டு ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார்.

"இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவானது இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள் ளது. அதன்படி, தொடர்ந்து மின்கட்டணங்களில் சிக்கல் நிலை ஏற்படுமாயின் இலங்கை மின்சார சபை மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவில் தெரிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# முதலைக் கண்ணீர் வடிக்கிறார் சுமந்திரன்

## கருணா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

கொழும்பில் பிறந்து வளர்ந்த சுமந்திரனுக்கு வடக்கு, கிழக்குப் பற்றி எதுவும் தெரியாது என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட தேர்தல் நிலைமை தொடர்பில் கட்சி வேட்பாளர்களை நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) சந்தித்து கலந்துரையாடிய பின்னர் கல்முனை கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "சுமந்திரன் பற்றி நான் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை அவருக்கு வடக்கு கிழக்குப் பற்றி எதுவும் தெரியாது. அவர் கொழும்பிலே பிறந்து வாழ்ந்தவர். சுமந்திரனின் பொய் கிழக்கு மக்களிடம் எடுபடாது. அவர்சும்மா முதலைக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார். கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தோல்வியடையும் என்பதை உணர்ந்து கொண்டுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் " என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# மருந்துகளின் விலையை அதிகரிக்கும் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 17

அனுமதியின்றி மருந்துகளின் விலைகளை அதிகரிக்கும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மருந்துகளின் விலைகளைஅனுமதியின்றி அதிகரிக்கும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அனுமதியின்றி மருந்துகளின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு எந்தவொரு நிறுவனத்துக்கும் சட்டபூர்வ அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே இதனை மீறிச் செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்' - என்றுள்ளது. (ஐ)

# லீசிங் கம்பனி ஊழியர்கள் 6 பேர் கைது

கொழும்பு,ஜூன் 17

கார் ஒன்றை பறிமுதல் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் லீசிங் கம்பனி ஊழியர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். களுத்துறையில் இருந்து நிட்டம்புவ நோக்கி சென்ற கார் ஒன்றை லீசிங் நிலுவை பணம் செலுத்தத் தவறியதாகக் கூறி அதனை பறிமுதல் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 6 பேரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# கூட்டமைப்பை பங்காளியாக்க மஸ்தானுக்கு வந்த யோசனை

## நிபந்தனைகளற்ற ஆதரவை வழங்கட்டுமாம்



வவுனியா, ஜூன் 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளித்து நாட்டின் அபிவிருத்திக்காக உண்மையாகச் செயற்பட்டு, நிபந்தனைகளற்ற ஆதரவை அரசுக்கு வழங்கினால் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசின் பங்காளிகளாவது பற்றி கலந்துரையாடலாம் என முன்னாள் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் பெருவாரியான வாக்குகளை எமது ஜனாதிபதி பெறுவார் என்று நாம் கடந்தமுறை சொன்னோம். அதனை மக்கள் நம்பவில்லை. எனினும் 16 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றிபெற்றோம். அதுபோல இந்தத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பாண்மையைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது இப்பகுதியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதியின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்து அவரது கரத்தை பலப்படுத்துவதற்காக, எமது வேட்பாளர்கள் மீது நம்பிக்கைவைத்து, எம்மை நாடாளுமன்றம் அனுப்பி அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கலாம் என எமது மக்கள் நினைப்பதால், நாம் நிச்சயம் மூன்றில் இரண்டு பெரும்பாண்மையைப் பெறுவோம். இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளித்து நாட்டின் அபிவிருத்திக்காக உண்மையாகச் செயற்பட்டு, நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினால் அவர்களை அரசின் பங்காளிகளாக்குவது தொடர்பாக உயர்மட்டத்தில் கலந்துரையாடப்படும் -என்றார். (ப-110)

## சொய்ஸாபுர தாக்குதல்; மேலும் ஒருவர் கைது

இரத்மலானை சொய்ஸாபுர பகுதியில் உணகவகம் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கைதான சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனத்தின் சாரதி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ரி56 ரக துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் வெளிநாட்டு தயாரிப்பு கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதன் பின்னர் சந்தேகநபர் புத்தல பகுதியில் மறைந்திருந்த நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இடியப்பச் சிக்கலுக்குள் இலங்கை ஜனநாயகம்



## ஐ.தே.கவின் பிரதிச் செயலர் விஜயவர்த்தன கடும் சாடல்

**கொழும்பு, ஜூன் 17**

**இலங்கையில் ஜனநாயகம் மிகப்பெரும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. அரசு மக்களின் பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்காமல் அரசியல் கட்சிகளின் பிரச்சினைகள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றது இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் ருவன் விஜயவர்த்தன.**

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக கொரோனா வைரஸ் தாக்கத்துடன் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

பலரது தொழில் வாய்ப்புக்கள் இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றன. சுயதொழில் செய்துவந்தவர்கள் தங்களது தொழிலை தொடரமுடியாத நிலையில் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுப்பது அரசின் முக்கிய கடமை.

ஆனால் பல்வேறு வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த அரசு, மக்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அதற்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்காமல் அரசியல் கட்சிகளின் பிரச்சினை தொடர்பாக கதைத்து வருகின்றது.

கொரானோ வைரஸ் பாதிப்பு ஏற்பட்டபோது பல்வேறு சலுகைகளை வழங்குவதாக அரசு அறிவித்திருந்தது. ஆனால் அரசின் எந்தவொரு சலுகையும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

நாட்டுக்குள் போராட்டங்களை நடத்த முடியாதவகையில் அரசு தடைகளை ஏற்படுத்தியுள்ளது. சட்டத்தை நிலை நாட்டும்போதும் ஒருசாராருக்கு ஒருமாதிரியும் மற்றவர்களுக்கு வேறுமாதிரியுமே சட்டம் நிலைநாட்டப்படுகின்றது. ஜனநாயகத்தை விரும்பும் எவரும் அரசின் இந்த நடவடிக்கையை அனுமதிப்பதில்லை. காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமானின் இறுதிச்சடங்கு நிகழ்வின்போது அரசு தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை.

ஆனால் முன்னிலை சோசலிச கட்சி அமைதியான முறையில் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போராட்டத்தை குழப்பி, அங்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அவர்களைக் கைதுசெய்திருந்தது.

எனவே எமது காலத்தில் பாதுகாக்கப்பட்டுவந்த மக்களின் ஜனநாயக உரிமைகள் தற்போது பெருமளவில் மீறப்பட்டுள்ளன. இந்தநிலை நாட்டின் ஜனநாயகத்தையே சவாலுக்கு உட்படுத்தியுள்ளது - என்றார். (ம)

## பொலிஸ் அதிகாரியாக நடித்தவர் கைது

பொலிஸ் அதிகாரியாக நடித்து பம்பலப்பிட்டி பொலிஸ் களப்படை தலைமையகத்துக்குள் நுழைய முயன்ற இளைஞர் ஒருவர் நாரஹேன்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு 12 ஐச் சேர்ந்த (வயது-23) இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் குற்றப்புலனாய்வுப் பிரிவில் கடமை புரிகிறார் எனவும் சர்வதேச பொலிஸ் அடையாள அட்டை ஒன்றை தான் பெற வேண்டியுள்ளது எனவும் சந்தேகநபரான குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார். என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி2)



# சில வருடங்களுக்குள் தீர்வை எதிர்பார்க்கலாம்

## முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் ஆருடம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

இன்று நாளை நாங்கள் போய்விடலாம். ஆனால் எமது வம்சத்தில் உதிப்பவர்கள் 100 வருடத்திற்கு மேலும் போராட்டத்தை நடத்துவார்கள் தமது நீதியான உரித்துக்கள் கிடைக்கும்வரை! இதனைஉணர்ந்து சிங்களத் தலைவர்கள் நியாயமானதீர்வொன்றை வெகுவிரைவில் கொண்டு வந்து அதன் அடிப்படையில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. காரணம் அவர்களுக்கு உலக நெருக்குதல்கள் கூடிக் கொண்டு வருகின்றன. இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமாகிய சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வாராந்தக் கேள்வி பதில் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவருடைய கேள்விக்கான பதிலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சில நாள்களுக்கு முன்பதான பத்திரிகையின் படி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கான தீர்வை தான் மட்டுந்தான் தரமுடியும் என்று கூறியுள்ளார். அது அவரால் முடியாது. ஏன் என்றால் அவருக்குத் தமிழர்களின் பிரச்சினை என்னவென்றே தெரியாது. பின் எப்படி தமிழர்களின் பிரச்சினைக்குத் தானே தீர்வைத்தரப் போவதாக அறிவிப்பது? எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியாலும் தமிழர்களுக்கான தீர்வைத்தர முடியாது. அப்படித் தருவதானால் அவர்கள் பின்வரும் உண்மைகளை ஏற்க வேண்டியிருக்கும். அவர்களால் அவற்றை, ஏற்க முடியாது. அவர்களின் அகந்தை, அறியாமை போன்றவை அதற்கு இடம் கொடுக்கமாட்டா.

அவையாவன - இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் சைவத் தமிழரே. சரித்திர ரீதியாக இதில் எந்தவித மயக்கமும் இல்லை. அவர்கள் தொடர்ந்து இலங்கையின் மேற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளார்கள். மகாவம்சம் வரலாற்று நூல் அன்று. அது பௌத்தத்தை மாண்புறச் செய்ய எழுதப்பட்ட புனை கதை. அது பாளியில் எழுதப்பட்டது. அது எழுதப்பட்ட போது சிங்களவர்களும் இருக்கவில்லை, சிங்கள மொழியும் இருக்கவில்லை. சிங்கள மொழி ஒரு மொழியாக பரிணாமம் பெற்றது கி.பி. 6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டிலேயே. பிரிட்டிஷார் 1833ல் நாட்டை நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கும் வரையில் தமிழ் பேசும் மக்கள் தமக்கென இராஜ்ஜியங்களை அமைத்து வடக்கு கிழக்கில் 3000 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து குடியிருந்து வந்துள்ளார்கள். கிழக்கில் கண்டி அரசர்களுக்கு சில சமயங்களில் திறை செலுத்தினாலும் கிழக்கில் வாழ்ந்து வந்தவர்கள் தமிழரே. இது வரையில் தமிழர்க்கு எதிராக நடந்து வந்திருப்பது இனப்படுகொலையே. இவற்றை ஏற்காது எந்தச் சிங்களத் தலைவராலும் தமிழர் எதிர் பார்க்கும் தீர்வைத் தரமுடியாது. வேண்டுமானால் இவ்வளவுதான் தரலாம் என்று தமது எச்சில் இலையில் உள்ள எலும்புகளை எமக்குத் தூக்கிப் போடலாம். தமிழர்கள் சிலர் அதனை ஏற்கச் சித்தமாக உள்ளார்கள். ஆனால் பெரும்பான்மைத் தமிழர்கள் தம்முடைய மாண்பையும் மதிப்பையும் நெடிய இருப்பையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வையே ஏற்றுக் கொள்வார்கள். ஐரோப்பாவில் 100 வருடப் போர் நடந்தது. அயர்லாந்து மக்கள் பல வருடகாலம் போர் புரிந்து வந்துள்ளார்கள். அதேபோன்று தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறும் வரையில் போராடுவார்கள். தமிழர்கள் தமக்கிருக்கும் உண்மையான, நீதியான, நியாயமான உரித்துக்களை முன்வைத்தே தமது தீர்வுகளைக் கேட்கின்றனர். அதனை வழங்காது சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி வந்தால் 100 வருடத்திற்கும் தொடர்ந்து போராட்டம் நடத்த தமிழ் மக்கள் உள்ளுறுதி கொண்டிருக்கின்றனர். கேப்பாப்பிலவு மக்களின் மன உறுதியையும் விடா முயற்சியையும் உலகம் அறியும். இன்று நாளை நாங்கள் போய்விடலாம். ஆனால் எமது வம்சத்தில் உதிப்பவர்கள் 100 வருடத்திற்கு மேலும் போராட்டத்தை நடத்துவார்கள் தமது நீதியான உரித்துக்கள் கிடைக்கும் வரை! இதனை உணர்ந்து சிங்களத் தலைவர்கள் நியாயமான தீர்வொன்றை வெகு விரைவில் கொண்டுவந்து அதன் அடிப்படையில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. காரணம் அவர்களுக்கு உலக நெருக்குதல்கள் கூடிக்கொண்டு வருகின்றன. பொருளாதாரம் சிதைந்து வருகின்றது. தமிழர்களுடன் ஒப்பந்தம் செய்யாவிட்டால் தாம் இன்னொரு நாட்டின் அடிமையாக நேரிடும் என்ற பயம் பீடித்துள்ளது. எமது புலம்பெயர் மக்களின் இன வழியான ஈடுபாடு அவர்களை மலைக்க வைத்துள்ளது. இவற்றைவிட தாம் இதுகாறும் தமிழர்களுக்கு இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் இடைஞ்சல்களையும் கொடுத்து வந்துள்ளோம் என்ற எண்ணம் இவர்களிடையே மேலோங்கி வருகின்றது. இனப்படுகொலையை ஏற்காவிட்டாலும் படுகொலைகள் பல தமிழர்க்கெதிராக தம்மால் நடத்தப்பட்டன என்ற உண்மை அவர்களுள் உறைக்கத் தொடங்கியுள்ளது. இதனைச் சிங்களச் சகோதர சகோதரிகளே அவர்களுக்கு இடித்துரைத்து வருகின்றனர். சில வருடங்களுள் ஒரு சிறந்த தீர்வை எதிர்பார்க்கலாம் - என்றுள்ளது. (ப)



# சட்டவிரோத முறையில் அகழ்ந்த மணல் அங்கேயே மீள்நிரப்பல்

**கிளிநொச்சி, ஜூன் 17**

**கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அகழப்பட்ட பெருமளவு மணல் நேற்று அந்தந்த பொலிஸார் மற்றும் துறைசார் அதிகாரிகளின் முன்னிலையில் மீள் நிரப்பல் செய்யப்பட்டது.**

பெரியகுளம் பகுதியில் தொடர்ச்சியாக பொதுமக்களின் காணி வயல் நிலங்கள் உள்ளிட்ட இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகளவில் இடம்பெற்று வந்தது. இது தொடர்பில் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலகம், மற்றும் பொலிஸ் நிலையங்களில் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் பொலிஸார் மற்றும் கண்டாவளை பிரதேச செயலகத்தினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் பெரியகுளம் பகுதியில் சட்டவிரோதமாக அகழப்பட்டு குவிக்கப்பட்டிருந்த பெருமளவு மணல் பிடிக்கப்பட்டது. மணல் முழுவதும் அகழ்வு இடம்பெற்ற இடங்களில் மீள்நிரப்பல் செய்யப்பட்டது. (ம-214)

# பாலித தெவரப்பெரும மருத்துவமனையில்

களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு நேற்று இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட இருந்தது.

பாலித தெவரபெரும நீண்ட காலமாக இதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் கொரோனாத் தொற்றால் முடக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்தமையால், தேவையான சிகிச்சையைப் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க)



விதையனைத்தும் விருட்சமே அமைப்பின் முதல்வர் ச.லக்ஸன் சிறந்த குருதிக் கொடைமுகாமை ஒழுங்கமைப்பவர்களில் ஒருவராக இனங் காணப்பட்டு கொழும்பு மத்திய இரத்த வங்கியால் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ம-19)

# ஜனாதிபதி செயலணிகள் மக்களின் நலன்களைக் கருத்திற்கொள்ளா!

## சிவில் அமைப்புக்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

கிழக்கு மாகாணத்தில் பரவலாக வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரைப் புறக்கணித்து பெருமளவில் பௌத்த மதகுருக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிகள் இந்த சமூகங்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது செயற்படும் சாத்தியப்பாடுகளே காணப்படுகின்றன என்று குறிப்பிட்டு 15 சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் 59 சமூக ஆர்வலர்களால் கையெழுத்திடப்பட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட தனிநபர்கள் 59 பேரும், இலங்கையில் நல்லாட்சிக்கான ஆஸ்திரேலிய சட்டத்தரணிகள் சங்கம் , மனித உரிமைகள் மேம்பாட்டு மையம் , சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளை உள்ளிட்ட 15 சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து வெளியிட்டனர்.

அதில் உள்ளதாவது;

இவ்வறிக்கையில் கையெழுத்திட்டுள்ள சிவில் சமூகத்தைச் சார்ந்த நாம், கடந்த சில மாதங்களாக அதிகரித்து வரும் ஜனாதிபதி செயலணிகள் தொடர்பில் அவதானித்து வருகின்றோம். கொவிட்19 சூழலுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மூன்று ஜனாதிபதி செயலணிகளை நியமித்துள்ளார். இவற்றில் ஒரு செயலணிக்கு ஒட்டு மொத்த சமூக வாழ்விற்கு நிலையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கான முன்னெடுப்பு, ஒருங்கிணைப்பு, மற்றும் கண்காணிப்புகளை மேற்கொள்ள பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உருவாக்கப்பட்டு இயங்கி வரும் தொல்பொருள் திணைக்களத்தைப் புறக்கணித்து, இச்செயலணிகள் பரந்த மற்றும் தெளிவற்ற ஆணைகளைக் கொண்டுள்ளதோடு நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறாத நிலையில் அவற்றின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுவதை மேற்பார்வை செய்யமுடியாத ஓர் காலகட்டத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னொருபோதும் நிகழாத விதத்தில் சுகாதார, பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் காணப்படும் ஒரு கட்டத்தில் தொல்பொருள் மற்றும் மரபுரீதியிலான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குவது உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய ஓர் விடயமாகும். இச்செயலணிகளின் உறுப்பினர்களில் மிக பெரும்பாலானவர்கள் சிங்கள சமூகத்தைச் சார்ந்தவர்களாவர். கிழக்கு மாகாணத்தில் பரவலாக வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரைப் புறக்கணித்துவிட்டு அதிகளவிலான பௌத்த மதகுருக்களை இம்மாகாணத்துக்கான செயலணி கொண்டுள்ளது - என்றுள்ளது. (ஐ)

## கட்டுநாயக்காவின் ஒரு பகுதி திறப்பு

கொழும்பு, ஜூன் 17
கட்டுநாயக்கவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படல் கூடம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது என்று விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.
விமானப் பயணி ஒருவருடன் 3 பேர் வழியனுப்பல் கூடத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். அத்துடன் விமானப் பயணிகள் மற்றும் அவர்களுடன் வருவோரும் முகக் கவசம் அணிவதுடன், தனிநபர் இடைவெளியைப் பேணுவது தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (சு)

## கார் விபத்தில் பெண் சாவு

கொழும்பு, ஜூன் 17
வெள்ளவத்தை பாமன் கடைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து இருநாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. இரு கார்கள் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஞானசாரதேரர் பயங்கரவாதி!

*பேஸ்புக் நிறுவனத்துக்கு அறிவித்ததாம் மைத்திரி அரசு*

கொழும்பு, ஜூன் 17
கடந்த அரசாங்கம் தன்னைப் பயங்கரவாதி என பேஸ்புக் நிறுவனத்துக்கு அறிவித்திருந்ததாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக பேஸ்புக் நிறுவனம் தனது புகைப்படம் மற்றும் பெயருக்கும் தடை விதித்திருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்து விட்டு, செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இலங்கையில் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் தகவல்களை வெளியிட்ட போதிலும் அது குறித்து அன்றைய பாதுகாப்புச் செயலாளரும், இன்றைய ஜனாதிபதியுமான கோத்தபாய ராஜபக்ஷ மாத்திரமே கவனம் செலுத்தியிருந்தார். அவர் தற்போது நாட்டின் ஜனாதிபதி என்பதால், இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அடக்குவதற்காக சாதகமான நடவடிக்கைகளை எடுப்பார் என நம்ப முடியும்- என்றார். (ப)

# ஐ.தே.க. அழிந்தது சஜித்தாலேயே!

*நாமல் குற்றச்சாட்டு*



**அம்பாந்தோட்டை, ஜூன் 17**
**ஐக்கிய தேசியக் கட்சி அழிந்தமைக்கு சஜித் பிரேமதாசவின் செயற்பாடுகள்தான் காரணமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அம்பாந்தோட்டை பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைக்கும் தேவை இருக்கின்றது.
எனவே அவ்வாறான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அனைத்துச் சக்திகளையும் ஒன்றிணைத்து தேர்தல் பயணத்தை மேற்கொள்ள இருக்கின்றோம்.
இதேவேளை சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்படுத்திய சிக்கலே அழிவுக்கு காரணமாயிற்று.
இதனால் பாரம்பரிய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள், மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளனர்.
அவ்வாறான ஆதரவாளர்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்றார். (ப)

# மேற்குலக சக்திகளின் வழிநடத்தலில் மங்கள

*பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு*



கொழும்பு, ஜூன் 17
நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, மேற்குலக சக்திகளின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றாரென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நீண்டகாலமாக மங்கள சமரவீரவுக்கு ஆதரவளித்து வரும் மேற்குலக சக்திகளின் ஆலோசனையின் அடிப்படையிலேயே அவர் நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அத்துடன் மங்கள சமரவீர, மாத்தறையில் தேர்தலில் போட்டியிட்டால் அதில் நிச்சயம் தோல்வியடைவார்.
அவரது தோல்வி வெளிநாட்டுச் சக்திகளின் தோல்வியாகவே அமையும். இதனால்தான் மேற்குலக சக்திகள் போட்டியிடவேண்டாமென அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளன. மேலும் மங்கள, தனிநபர் இல்லை அவர் பல மேற்குலக நாடுகளால் ஆதரவளிக்கப்படும் நபராவார் என்றார். (ப)

## பெயர் மாற்றினார் அர்ஜுன மகேந்திரன்

*நீதிமன்றுக்கு அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 17
மத்திய வங்கிமுறி மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தனது பெயரை மாற்றிக் கொண்டார் என்று சட்டமா அதிபரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தனது பெயரை ஹர்ஜன் அலெக்ஸாண்டர் (Harjan Alexander) என மாற்றிக் கொண்டார் என்று சர்வதேச பொலிஸார் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். (சு)

## இதுவரை 242.57 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 17
இலங்கை மத்திய வங்கி இந்த மாதம் 12 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் ஒரு பில்லியன் ரூபா மதிப்புள்ள நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது.
அந்த வகையில் இதுவரையில் 242.57 பில்லியன் ரூபா பணத்தை அச்சிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கித்துறையைப் பொறுத்தமட்டில் ஒரே இரவில் பணப்புழக்கமானது 21.42 பில்லியன் ரூபா குறைந்து 88.19 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதுமாத்திரமன்றி கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் மத்திய வங்கியின் நிதியிருப்பின் அளவு குறைவடைந்திருக்கிறது.
குறிப்பாக வர்த்தக வங்கிகளால் மத்திய வங்கியுடன் மேற்கொள்ளப்படும் நிதிக்கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரை வைப்புச் செய்யும் நிதியிருப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் பொருளாதாரம் பெரும் பின்னடைவைச் சந்திக்கும் நிலையொன்று ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரத்திலும் இது பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியதுடன், நிதியிருப்பில் வீழ்ச்சியேற்படுவதற்கும் காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு)

## பஞ்சமுக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் ஆலயத்தில் பஞ்சமுக அர்ச்சனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்முறை நடைபெறவில்லை. எனினும் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றி காலைவேளையில் அபிஷேகம் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் தேர்த் திருவிழா நடைபெறாத காரணத்தால் பஞ்சமுக அர்ச்சனை நடைபெறவுள்ளதாக ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# ஊழல், மோசடிக்காரர்களுக்கே பதவிகளை வழங்கினார் ரணில்!

*சமீர பெரேரா குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 17
மக்களால் நிராகரிக்கப்பட்ட, நாட்டில் நடந்த ஊழல் மற்றும் மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அந்த கட்சியில் உயர் பதவிகளை வழங்கியுள்ளார் என்று தேசிய மக்கள் சபையின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.
ஹட்டன் நகரில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வைத்து சமீர பெரேரா இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிக தினக் கூலியாக 50 ரூபாய் வழங்கப்படுவதை எதிர்த்த முன்னாள் பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கு ரணில் விக்கிரமசிங்க, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் பதவியை வழங்கியுள்ளார்.
அதேவேளை நாட்டின் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களின் போராட்டங்களை அடக்குவதற்காகவே தற்போதைய அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டமூலத்தையும் அதன் சட்டதிட்டங்களையும் பயன்படுத்தி வருகிறது-என்றார். (ப)

## 6கிலோ கஞ்சாவுடன் கைது

வவுனியா, ஜூன் 17
வவுனியா ஓமந்தையில் 6கிலோ 400கிராம் கஞ்சா மீட்கப்பட்டதோடு அதை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
புளியங்குளம் இராமனூர் விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை இடம்பெற்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஓமந்தை பறநட்டாங்கல் பகுதியை சேர்ந்த 29வயதுடையவரையே விஷேட அதிரடி படையினர் கைதுசெய்து ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (த-110)

# அம்பான் புயல் அழிவு இழப்பீடு இன்னுமில்லை

## மாவட்டச் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 17
அம்பான் புயலால் அழிவடைந்த வாழை, பப்பாசி போன்ற பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவான 46.5 மில்லியன் ரூபா இதுவரை கிடைக்கவில்லை என்று மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
அம்பான் புயல் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் அழிவடைந்த வாழை, பப்பாசி ஆகியவற்றுக்கு இழப்பீடு வழங்குவதற்கு கடந்த 27ஆம் திகதி அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட வாழை, பப்பாசி, தென்னைச் செய்கைகள் அம்பான் புயலினால் அழிவடைந்திருந்தன. இது தொடர்பில் விவசாயிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். மாவட்டச் செயலகத்தால் விவரம் திரட்டப்பட்டு சுமார் 46.5 மில்லியன் ரூபா அழிவு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டது.
மாவட்டச் செயலர் கோரிய 46.5 மில்லியன் ரூபா தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டது. அதன் அடிப்படையில் அம்பான் புயல் பாதிப்புக்கான இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியது.
அந்தப் பாதிப்பின் தனித் தனியான விவரம் தற்போது கோரப்பட்டுள்ளது. (ஒ.5,105)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (20.05.2020) புதன்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவி

அமரர்
**இராமச்சந்திரன்**
**இறஞ்சினி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (17.06.2020) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு டிக்கோயா வனராஜா ஆற்றங்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (19.06.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**199/9, 2ஆம் ஒழுங்கை,**
**திம்புள்ள வீதி, ஹட்டன்**
**077 6782201/077 3881804**

**ஆழ்ந்த துயரத்தில் இருக்கும்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
23
08
1930



மறைவு
16
06
2020

**வைத்திலிங்கம் கண்மணி**

யாழ். உடுப்பிட்டி கம்பர்மலை கொம்மாந்தரையைப் பிறப்பிடமாகவும் இல.600/5, இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும், தற்போது இல.191/2, திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கண்மணி நேற்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சேதுகாவலர் (திருவையாறு), ஜெயரதி (தொண்டமனாறு), சுலோசனா (இராமநாதபுரம்), அபயன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி (திருவையாறு), தவராசா (தொண்டமனாறு), சிவபாதசுந்தரம் (இராமநாதபுரம்), வதனி (லண்டன்), யோகலிங்கம் (இராமநாதபுரம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2020) புதன்கிழமை அன்னாரின் வதிவிடமான இல.191/2, திருவையாறு, கிளிநொச்சியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**
077 384 6253,
077 241 1512.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# நாடு திரும்பிய பெண்ணிடம் டிமிக்கிவிட்ட கொரோனா!

கொழும்பு, ஜூன் 17
கொரோனா தொற்றிலிருந்து முழுமையாக மீண்ட பெண்ணுக்கு மீண்டும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், அவரிடத்தில் இறந்த கொரோனாவே காணப்பட்டது என்பது அடுத்தகட்ட பரிசோதனையில் தெரியவந்தது. அதனால் அவர் வீடு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.
இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
36 வயதான அந்தப் பெண் கடந்த மாதம் 18 ஆம் திகதி குவைத் நாட்டிலிருந்து நாடு திரும்பியிருந்தார். அவர் திருகோணமலையிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டார்.
கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் அவரிடத்தில் காணப்பட்டதனால் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.
அவருக்கு 2 தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனைகளின்போது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.
அவர், அநுராதபுரம் கெப்பத்திக்கொலாவையில் உள்ள தனது வீட்டுக்கு சென்றுள்ளார்.
இந்த நிலையில், அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.
சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது என்று அநுராதபுரம் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் துலான் சமரவீர குறிப்பிட்டார்.
இதனையடுத்து குறித்த பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக ஐ.டி.எச் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு நடத்திய பரிசோதனையிலேயே அவரிடம் இறந்த கொரோனாவே இனங்காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த,எ,ரி1)

## 'மோல் அமியா' குண்டுடன் கைது

பாதாள உலகக் குழுவின் காலி மாவட்ட முக்கியஸ்தர் என்று கூறப்படும் 'மோல் அமியா' கைது செய்யப்பட்டுள்ளார் என்று மீட்டியாகொட பொலிஸார் தெரிவித்தனர்.
கொலைகள், வீடுகளுக்குத் தீ வைப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் விநியோகம் போன்ற குற்றச் செயல்களுடன் இவருக்கு தொடர்புள்ளது. கைக்குண்டு ஒன்றுடன் இவர் வெருலன பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பலப்பிட்டி உயர் நீதிமன்றில் விசாரணையிலுள்ள இரு கொலை வழக்குகளுடன் இவருக்கு தொடர்பிருப்பிருப்பதாகவும் இந்த இரு சம்பவங்களினதும் பிரதான சந்தேக நபர் இவர் என்றும் பொலிஸார் கூறினர். (த)

## மேலதிக பயணிகளை ஏற்றினால் 1955 இலக்கத்துக்கு அறிவிக்கவும்

கொழும்பு, ஜூன் 17
சில தனியார் பஸ்கள் ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்கின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே இது தொடர்பான முறைப்பாடுகளை 1955 எனும் ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கலாம் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொமாண்டர் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.
கிடைக்கும் முறைப்பாடுகள், மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு அறிவிக்கப்படும்.
கொரோனா வைரஸ் பரவல் நிலையைத் தொடர்ந்து, பயணிகள் போக்குவரத்து பஸ் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

### ஆயுர்வேத வைத்தியர் தேவை

ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் யாழ் நகரில் பணியாற்றுவதற்கு பெண் ஆயுர் வேத வைத்தியர் உடன் தேவை. (புதிதாக பட்டம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு: **077 912 8944**

### வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவிலில் இருந்து 1 km எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: **077 830 5822**


# 24 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

சுன்னாகத்தில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் சட்டவிரோத கூட்டத்தைக் கூட்டினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 26 பேரில் 24 பேரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாண நீதி மன்று நேற்று உத்தரவிட்டது.

ஏனைய இருவரும் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பதனால் அவர்கள் தலா ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது. இது பற்றிய தகவல் அறிந்த யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார், பிறந்தநாள் நடைபெற்ற வீட்டுக்குச் சென்று நிகழ்வில் பங்கேற்ற 40க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தினர். அதன்பின்னர் அவர்களில் 26 பேரை மட்டும் கைது செய்திருந்தனர். அவர்களிடம் இரவிரவாக நேற்று அதிகாலை வரை வாக்குமூலம் பெறப்பட்டது. நேற்று யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் 26 பேரும் முற்படுத்தப்பட்டனர்.

"சந்தேக நபர்கள் சட்டவிரோதமாக கூட்டத்தைக் கூடியிருந்தனர். வன்முறை ஒன்றுக்குத் தயாரான நிலையில் இருந்தவேளையிலேயே கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களின் கைவிரல் ரேகைகள் அரச பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களின் விவரங்கள் வடக்கு மாகாணத்திலுள்ள ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளன. வேறு பொலிஸ் நிலையங்களில் வழக்குக்கள் இருந்தால் சந்தேக நபர்களை ஒப்படைக்க வசதியாக அவர்களை விளக்கமறியலில் வைக்கவேண்டும்" என்று பொலிஸார் நீண்ட சமர்ப்பணத்தை மன்றில் முன்வைத்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பொலிஸாரின் குற்றச்சாட்டை நிராகரித்து பிணை கோரினர். இறுதியில் நீதிவான் மறியல் உத்தரவை பிறப்பித்தார். பிறந்தநாள் கொண்டாடியவர்கள் வன்முறைக்குத் தயாராகினார்கள் என்று பொலிஸார் தெரிவித்த போதும் வாள் உள்ளிட்ட எந்தவொரு சான்றுப்பொருள்களையும் நீதிமன்றில் பாரப்படுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு-105,106)


## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி -2020
## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

1. சபைநிதி – 2020 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு **பிரதேசசபை** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
4. மேலும் உரிய கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C8/ C7 தரத்தில் **வீதி அமைப்பிற்கான** CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023** e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை 01.07.2020 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 17.06.2020ம் திகதியிலிருந்து 01.07.2020ம் **திகதி** வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 02.07.2020ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து எழுபத்தேழு (77- 17.09.2020) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (கட்ட) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/44(04)/ Coun./Dev/W - 01/2020 | மந்துவில் குழந்தையேசு கோயில் 2ம் குறுக்கு வீதி தாரிட்டு புனரமைத்தல் | 2.455 | 60 நாள்கள் | C8/ C7 | 25,000 | 15.10.2020 |
| NP/14/44(04)/ Coun./Dev/W - 02/2020 | ஒட்டுசுட்டான் விநாயகர் வீதி தாரிட்டு புனரமைத்தல் | 2.486 | 60 நாள்கள் | C8/ C7 | 25,000 | 15.10.2020 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, **புதுக்குடியிருப்பு** அலுவலக கட்டடத்தில் 2020.06.29. அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
பிரதேசசபை பெறுகைக்குழு
புதுக்குடியிருப்பு பிரதேசசபை.
புதுக்குடியிருப்பு
2020.06.17.



## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி    முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





திரு.
**செல்லையா தியாகராஜா**
(மதுவரி திணைக்கள ஆணையாளர்)

திருமதி
**தியாகராஜா சீதாதேவி**

ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

### சிவகுருநாதன் இரங்கராஜா அவர்கள்



முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரும், வடக்கு மாகாண பிரதம செயலாளருமாக பதவி வகித்தவர். அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட செயற்பாடுகளை மேற்கொண்டவர். இவருடையு இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வருமானமீட்டும் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்திட்ட ஆலோசனைக்கு வழிவகுத்தவர். அத்துடன் யாழ் மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வளர்ச்சிக்கு பல்வேறுபட்ட ஆலோசனைகளையும் அபிவிருத்தி திட்டங்களையும் வகுத்து யாழ் மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவியவர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் மாவட்ட கிளைக்கு இவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்பதுடன் அவருடைய குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கு.பாலகிருஸ்ணன்**
**தலைவர்.**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ். கிளை**

**க.மகாலிங்கம்**
**செயலாளர்**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ். கிளை**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு பெறுகைக்கான அழைப்பு
## வாகன சுத்திகரிப்பு - 2020

முல்லைத்தீவு சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழு தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த வாகன சுத்திகரிப்பு நிறுவனத்திடம் இருந்து முத்திரையிடப்பட்ட பெறுகையினை கோருகின்றார்.

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை(ருபா) | பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு | 2000.00 | 50000.00 |

- விலைக்கேள்விதாரர் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- பெறுகைக்கு மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி **(Bid Security)** இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் **"Application for Bid documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய பெறுகைக்கு மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 17.06.2020 தொடக்கம் 07.07.2020 வரையான காலப்பகுதி யில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் 08.07.2020 ஆந் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 08.07.2020 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் **(T.P:021 229 0111, Fax: 021 2290 104 )** பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத் தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலு மிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்தியகலாநிதி. த. வினோதன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**


## சுகாதார சேவைகள் பணிப்பாளர் இடமாற்றம் தொடர்பில் வாக்குமூலங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக இருந்த ஏ.தேவநேசனின் இடமாற்றம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் வடக்கு சுகாதாரத் துறையினரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். பதில் பணிப்பாளர் தேவநேசன், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் உரிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று தெரிவித்து ஏப்ரல் மாதம் அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். ஊர்காவற்துறை மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியாக அவர் இடமாற்றப்பட்டிருந்தார். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றத்துக்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேர்தல்கள் ஆணைக்குழு இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு அறிவித்திருந்தது. ஆனால் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர். வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், இடமாற்றப்பட்டுள்ள பணிப்பாளர் ஏ.தேவநேசன் ஆகியோரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர். (ஒ.5,105)

## துப்பாக்கி வெளியே 3 குண்டுகள் உள்ளே

வல்வெட்டித்துறையில் வைரவர் கோவில் கிணற்றுக்குள் ரி56 ரக துப்பாக்கியும் மூன்று ஆட்லறி குண்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

அந்தக் கோவில் கிணற்றை இறைத்து துப்புரவுசெய்த போதே அவை கண்டறியப்பட்டன. அவற்றில்துப்பாக்கிஏனைய பொருள்களுடன் கிணற்றுக்கு வெளியே எடுக்கப்பட்டுவிட்டது. குண்டுகள் கிணற்றுக்குள் உள்ளன.பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றுஅவை மீட்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-159,26)

## மரண அறிவித்தலும் அந்தியேட்டி அழைப்பும்

| மண் அகம் | | விண் அகம் |
|---|---|---|
| 1924 |  | 2020 |
| 11 | | 05 |
| 27 | | 29 |

## திருமதி. இலட்சுமி மயில்வாகனம்
### (ஆயர்பாடி அம்மா)

யாழ்ப்பாணம். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும். மாவிட்டபுரம். தெல்லிப்பளை. கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இலட்சுமி மயில்வாகனம் (ஆயர்பாடி அம்மா) அவர்கள் 29.05.2020 வெள்ளிக்கிழமை வைகுந்தபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் **ஆயர்பாடி வே.த. மயில்வாகனம்** (மாவிட்டபுரம். தெல்லிப்பளை) ஐயாவின் துணைவியாரும். அமரர்கள் இளைய தம்பி - மாரிமுத்து தம்பதிகளின் புத்திரியும். அமரர்கள். மாவிட்டபுரம் தம்பு - மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும். அமரர்கள் வீரசிங்கம். வைத்தியலிங்கம். வேலாயுதம். தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரியும். அமரர்கள். கதிராசிப்பிள்ளை தம்பையா (மயிலிட்டி). கந்தையா (முன்னாள் போதனாசிரியர்- பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை). திருமதி சரஸ்வதி வைரமுத்து (பளை-வீமன் காமம்) ஆகியோரின் மைத்துனியும். **வைத்திய கலாநிதி. திருமதி. சரோஜினிதேவி,** (சுவிஸ் - முன்னாள் விரிவுரையாளர் யாழ்ப்பாணம் சித்த ஆயூர்வேத மருத்துவக் கல்லூரி).
**அமரர். கோபால கிருஷ்ணன், திரு. ராமகிருஷ்ணன்** (ஆயர்பாடி சோதிடர் - கொழும்பு).
**திரு. ஸ்ரீ கிருஷ்ணன்** ( முன்னாள் சுங்க அதிகாரி - கொழும்பு).
**திருமதி. ராதாதேவி, திரு. கிருஷ்ணதாசன்** ( சுவிஸ்). **அமரர் ருக்மணி தேவி,**
**திருமதி. ஸ்ரீ ஆண்டாள்** (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும். திரு. தியாகராஜா (சண்டிலிப்பாய் / சுவிஸ்). திருமதி. நவமணி ( வண்ணார்பண்ணை / அவுஸ்ரேலியா). திருமதி. கமலாதேவி (சண்டிலிப்பாய் / கொழும்பு). திருமதி. கலாவதி (சங்கத்தானை / கொழும்பு). திரு. அன்னலிங்கம் ( நவாலி / கொழும்பு). திருமதி. சுசிலாதேவி (அராலி / சுவிஸ்). திரு. நடராஜா (சண்டிலிப்பாய் / கொழும்பு). திரு. பாஸ்கரன் (சில்லாலை / கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். திருமதி. யசோதை - காங்காதரன் (சுவிஸ்) அமரர். கௌசல்யா. திருமதி. மைதிலி - செந்தில்தாசன் ( அவுஸ்ரேலியா) . தாரணி (அவுஸ்ரேலியா). திரு. ரகுராம். - ஷோபனா. ஜெயராமன். கிருஷ்ணி. நந்தகுமாரன். சாருஹாசினி. வைதேகி (அவுஸ்ரேலியா). ஜானகி. ராமதாஸ் (சுவிஸ்). ராமபிரியா (சுவிஸ்). ஸ்ரீ வேங்கடரமணன் (சிங்கப்பூர்). ஸ்ரீ ராங்கரமணன். ராங்கனி (கனடா). ராங்கன் (கனடா).ஆகியோரின் அன்புப் பாட்டியும். ராகவி (சுவிஸ்). கோகுல் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் **29.05.2020 அன்று கல்கிஸ்சை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று திருவுடல் கல்கிஸ்சை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.**

**அன்னாரது அந்தியேட்டி கிரியை 27.06.2020 அன்று கீரிமலை கண்டகீ தீர்த்தக்கரையிலும், சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் 29.06.2020 அன்று** 22/2/3. **அபோன்சோ மாவத்தை, தெகிவளையிலும்**
**அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனை 5.07.2020 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் நடைபெறும்.**

மேற்படி தகவல்களை உற்றார். உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

இப்படிக்கு. மக்கள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு :

திருமதி. தி. சரோஜினி தேவி - *+41 796308368*
திருமதி. ந. கோபாலகிருஷ்ணன் - *+61 449951983*
திரு. ம. ராமகிருஷ்ணன் - *+94 758006096*
திரு.ம. ஸ்ரீ கிருஷ்ணன் - *+94 777307494*
திருமதி. அ. ராதா தேவி - *+94 779862963*
திரு. வி. நடராஜா- *+94 775369593*
திரு. ம. கிருஷ்ணதாசன் - *+41 787123139*
திருமதி. பா. ஸ்ரீ ஆண்டாள் - *+14 164184238*


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிவன் வீதி, நொதேர்ன் சென்றல் வைத்திய சாலைக்கு அண்மையில் 2 3/4 பரப்பு டன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 077 731 8740**


## கண்ணீர் அஞ்சலி

கடந்த (15.06.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்த யாழ் போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமையாற்றும் திருமதி **சிந்துஜா பாலசுரேஷ்** அவர்களின் அன்புத் தந்தை

### கந்தையா கிருஷ்ணன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மருந்தாளர்கள்,**
**போதனா வைத்திய சாலை,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பலமுக்கிய பதவிகளை வகித்து நிறைவாக வடகிழக்கு மாகாண பிரதம செயலாளராகவும் வடக்கு மாகாண பிரதம செயலாளராகவும் அரும் பணியாற்றி சேவையாலும் நற்பண்புகளாலும் எல்லோர் மனதிலும் நிலை பெற்றுவிட்ட அருமை நண்பர்

### சிவகுருநாதன் ராங்கராஜா

அவர்களின் மறைவு குறித்து ஆழந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வே. பொ. பாலசிங்கம் குடும்பம்**
**நல்லூர் - முன்னாள் பிரதம செயலாளர் (கிழக்கு மாகாணம்)**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 . 04 . 1947 | 29 . 06 . 2019 |

## அமரர் குமாரசாமி செல்வராசா

திதி:ஏகாதசி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில்
என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்.

பெற்றா, மன்னார்.

# 31ஆவது நினைவு நாள்



தோற்றம்: 15.02.1933 மறைவு: 22.05.2020

## கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(ஓய்வுநிலை ஆசிரியர்)

7ஆம் வட்டாரம் மு/புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பின் புகழ்பூத்த ஆசிரியரும், தமிழ் வித்தகரும், ஊரின் உபதேசியும், அறம்மாறாத மூத்த கலைஞனுமாகிய எம் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவு 19.06.2020 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை ஏற்று உற்றார், உறவினர்கள், நண்பர்களை கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இந்த அறிவித்தலை பொது அறிவித்தலாக தெரிவிக்கப்படுகிறது.

**குறிப்பு:** மதியநேர போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 . 08 . 1935 | 16 . 06 . 2020 |

## திருமதி இராசரத்தினம் சின்னதங்கம்

நாவலடி, கோப்பாய் மத்தி கோப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் சின்னதங்கம் நேற்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு-அன்னம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (முன்னாள் கிராமசபை-VC உத்தியோகத்தர், மன்னார்) அன்பு மனைவியும், விஜயகுமாரின் (முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவு சங்கம், நீர்வேலி), சிறிய தாயும், நவீந்தினியின் (ஆசிரியை, இணுவில் இந்து கல்லூரி) அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசம்மா, பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, இராமலிங்கம் (ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்) ஆகி யோரின் மைத்துனியும், சஞ்ஜிதன், சதுஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நந்தன்காடு (கோப்பாய்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, பருத்தித்துறை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்.
0775532004
(ச.விஜயகுமார்-மகன்)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 . 11 . 1946 | 16 . 06 . 2020 |

## தியாகராசா சிவபாக்கியம்

இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தியாகராசா சிவபாக்கியம் நேற்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெருமாள் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் தியாகராசாவின் (அழகர்) அன்பு மனைவியும், சந்திரகுமாரி (கனடா), சந்திரசேகர், சந்திரகாசன், அரவிந்தன் (கனடா), சந்திரபோஸ், சந்திரபவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேந்திரன், அருந்ததி, பகீரதி, அஜந்தா, றோகினி ஆகியோரின் மாமியாரும், பிரவின், உபாசன், சிமித்தி, அருள்நிதி, யசோதாநிதி, ஆதித்தியன், சத்தியபாலன், சத்தியபாலினி, சத்தியஜெனனி, அஸ்வினி, அஸ்னா, அஸ்வின், தர்மிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2020) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்தட்டுமடம் 2ஆம் வீதி,
2ஆம் குறுக்கு வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல் : -
குடும்பத்தினர்.
077 844 8379

## முக்கிய...

கப்பட்டுள்ளது.
அதற்காக விஷேட அதிரடிப்படையின் கட்டளைத்தளபதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து பாதுகாப்பு மற்றும் பிற விடயங்கள் பற்றி ஆராய்ந்துள்ளார்.
சில நாள்களுக்கு முன்னர் வல்லையில் படை முகாம் அருகே வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. கிளிநொச்சியிலும் இந்நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் உயர் தளபதிகள் இன்று பலாலியில் முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-26)

## ஆரம்பப...

மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் திறப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.
இதற்கான ஆலோசனைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நீல் பண்டார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-ரி2)

## தமிழ்...

பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மாதம்பை பொலிஸ் நிலையத்துக்குள் நடந்துள்ளது.
மாதம்பை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் யாழ்ப்பாணம் தென்மராட்சி, மீசாலை வடக்கைச் சேர்ந்த நமசிவாயம் டயஸ் என்பவரே இவ்வாறு உயிர் மாய்த்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

## வாக்குகளை...

இந்தக் கட்சிகளையும், சுயேச்சைக் குழுக்களையும் தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும். அதனூடாக தமிழர்களின் ஏகோபித்த கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதைத் தமிழ் மக்கள் இந்தமுறையும் நிரூபித்துக்காட்ட வேண்டும்."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்திக் கோரியுள்ளார்.
இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், அரசியல் தீர்வுக்காகவும் நாடாளுமன்றத்திலும் சர்வதேச அரங்கிலும் குரல் கொடுத்து வருகின்ற ஒரே கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அதனால்தான் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகளும், இலங்கை வரும் சர்வதேச பிரமுகர்களும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் தான் பேச்சுகளை நடத்துகின்றனர்.
தமிழர்களின் உரிமைகளையும், அரசியல் தீர்வையும் வென்றெடுக்க நாம் ஓயாது பயணித்துக்கொண்டிருக்கின்றோம். இந்தப் பயணத்தின் இலக்கை அடைவது வெகுதூரத்தில் இல்லை. அதை நாம் அடைந்தே தீருவோம். சர்வதேசமும் எமது பக்கம் இருப்பதால் அந்த இலக்கை அடைவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.
தமிழ் மக்களுக்கு நாம் உண்மையாகவே இருக்கின்றோம். அவர்களுக்கு நாம் துரோகமிழைக்கவில்லை. அதனால் அவர்கள் எம்மை முழுமையாக நம்புகின்றார்கள். அந்த நம்பிக்கையின் வெளிப்பாட்டை இந்தமுறை பொதுத்தேர்தலிலும் அவர்கள் வெளிப்படுத்துவார்கள் என்றே நாம் நம்புகின்றோம்". என்றார். (த-22)

## கதிரையால்...

ருந்து தவறுதலாக வீட்டு மேடையில் வீழ்ந்துள்ளான். அதனால் தலைப்பகுதி வீங்கி, காதுப்பகுதிகளில் வலி உணரப்பட்டதை அடுத்து மந்திகை ஆதார மருத்துவமனையில் பெற்றோர் அனுமதித்தனர்.
அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சு-159)

## தமிழினத்தின்...

னர் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். அவர்களின் ஆதரவு எமக்கு மேலும் பலமாக இருக்கும்."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
'தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கப் பல சக்திகள் செயற்படுகின்றன. தமிழ் மக்கள் தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் நடைபெறவுள்ள தேர்தலில் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும்' என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் நேற்று அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு இரா.சம்பந்தன் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
"தமிழ் மக்களின் பலம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. அதற்கமைய தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் களமிறங்கியுள்ளமை வரவேற்கத்தக்க விடயம்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதன் ஊடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற உண்மை நிலையை ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்." என்று சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (த-22)

## தீயணைப்பு...

துக் கல்லூரிக்கு முன்பாக விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.
இந்த கோர விபத்து நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் இடம்பெற்றது.
வடமராட்சி மணல்காடு சவுக்கம் காட்டுப் பகுதியில் நேற்று திடீரெனத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. அதனால் அதிகளவான மரங்கள் தீயில் எரிந்து நாசமாகின. இது தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து, சவுக்கம் காட்டு தீயை அணைக்க யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம், வீரர்களையும் ஏற்றிக்கொண்டு மின்னல் வேகத்தில் சென்றது.
அவ்வாறு வேகமாகச் சென்ற வாகனம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியை அண்மித்த சமயம், அதன் முன்பக்க ரயர்கள் , எவரும் எதிர்பாராத வகையில் பெரும் சத்தத்துடன் வெடித்தன. இதனால் தீயணைப்பு வாகனம் கட்டுப்பாட்டை இழந்தது. அதனால் எதிர்த்திசையில் குத்துக்கரணம் அடித்தவாறு அருகில் இருந்த தோட்டமொன்றுக்குள் பாய்ந்து சரிந்து, கவிழ்ந்தது. இதன் போது வாகனத்தில் பயணித்த தீயணைப்பு வீரர்கள் தூக்கி வீசப்பட்டனர்.
திடீரென வாகனம் கவிழ்ந்ததால் தூக்கியெறியப்பட்டு, படுகாயமடைந்த மூவரும் அம்புலன்ஸில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு ஏற்றிச் செல்லப்பட்டனர். எனினும், யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த அரியரட்ணம் சகாயராஜா (வயது 36) என்பவர் உயிரிழந்தார். இவர் சாரதிக்கும் மற்றைய நபருக்கும் இடையே அமர்ந்து பயணித்துக்கொண்டிருந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.
போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணை நடத்தினார்.
இதேவேளை, யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான ஒரேயொரு தீயணைப்பு வாகனமும் இந்த விபத்தில் சிக்கி மோசமான சேதமடைந்துள்ளதால், யாழ். மாவட்டத்தில் தீ விபத்துக்கள் நேர்ந்தால், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத அபாய நிலை ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-ஒ,5,26,105)

## கூட்டமைப்பை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்க பல சக்திகள் செயற்படுகின்றன. தமிழ் மக்கள் தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் கூட்டமைப்பை நடைபெறவுள்ள தேர்தலில் பலப்படுத்த வேண்டும்.
இவ்வாறு ஜனநாயகப்போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் அழைப்பு விடுத்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எமக்கும் முரண்பட்ட கருத்துக்கள் எவையும் இல்லை. நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியா? எம்மைப் பயன்படுத்துகின்றனரா என வெளியில் பலர் கேள்வி கேட்கின்றனர். எம்மை யாரும் பயன்படுத்த முடியாது. தமிழ் அரசுக் கட்சியின் மீது நம்பிக்கை யான தொடர்பை நாம் வைத்துள்ளோம். தமிழ் அரசுக் கட்சியிலுள்ள சுமந்திரனுடன் கூட எமக்கு எவ்வித கருத்து முரண்பாடுகளும் இல்லை. நாம் பங்காளிக் கட்சிகளாக இருந்ததில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பக்கபலமாக அனுசரணையாக இருப்போம்.
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வடகிழக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் நாம் வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றியடையச் செய்யவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதன் ஊடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்கமுடியும். நாம் ஒவ்வொரு பிரிவுகளாகப் பிரிந்து நின்று எவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாது.
நாம் ஆயுதம் ஏந்தியது அரசியல் தந்திரோபாயமே. எனவே தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தலில் பல அணிகளாக பூதங்கள் களம் இறக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மணற்கொள்ளையர்கள், கிறீஸ் பூதங்கள், பெண்களை சீரழித்த குழுக்கள் இன்று மக்கள் முன்னிலையில் வாக்குக் கேட்கத் தொடங்கியுள்ளனர்.
எனவே நாம் தாயகத்தில் பாதுகாப்பாக சுதந்திரமாக இருக்க ஒரே வழி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சிலவிமர்சனங்கள் இருக்கலாம். இப்போது அவற்றை கதைப்பதற்கான நேரம் அல்ல.
தற்போது முன்னாள் போராளிகள் என்ற பெயரில் பல கட்சிகள் உருவாகின்றன. அவ்வாறான கட்சிகளில் இருப்பவர்கள் திராணி இருந்தால் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் எந்தப் படையணியில் எந்த இலக்கத்துடன் இருந்தார்கள் என்பதை வெளிப்படையாகக் கூறவேண்டும். எனவே போராளிகளின் பெயரில் உருவாகும் கட்சிகள் தொடர்பில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்- என்றார். (ப-111)

## கொரோனா...

1,371 ஆக உயர்வடைந்துள்ளது.
இதுவரை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 533 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.
இதனிடையே மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 55 பேர் கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளனர். (த-22)

## புதூர்...

கொள்ள அனுமதிக்கப்படுவர் என்று தீர் மானிக்கப் பட்டுள்ளது.
பொங்கல் விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அதற்கான நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் வவுனியா வடக்கு பிரதேச செயலர் இ.பிரதாபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.
கொறொனோ வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டே இந்த வரையறை தீர்மானிக்கப்பட்டதோடு அவர்களுக்கென்று விசேட அனுமதிப் பத்திரமும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர ஏனைய பக்தர்கள் கோவிலுக்கு செல்ல முடியாது. கோவிலின் இரு பிரதான வாசல்களிலும் பொலிஸார் வீதித்தடை ஏற்படுத்தி கண்காணிப்பர் என்றும் தீர்மானிக்கப்பப்பட்டது.
கோவிலில் நேர்த்திக்கடன் செலுத்தும் அடியவர்கள் பிறிதொரு தினத்தில் அதனைச் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட செயலர் சமன் பந்துலசேன, மேலதிக செயலர் தி.திரேஸ்குமார், உதவி பிரதேச செயலர் தர்மேந்திரா, வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் இ.தணிகாசலம், மருத்துவர் லவன் மற்றும் கோவில் நிர்வாகத்தினர் கலந்துகொண்டனர். (த-110)

## நீர்வேலி...

விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
வெடிப்பு சம்பவத்தில் இராணுவ சிப்பாய் ஒருவருக்கு சிறு காயம் ஏற்பட்டிருந்தது. இதுபற்றி பொலிஸாரும் இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.
இந்நிலையில் நீர்வேலியில் வசிக்கும் 25 வயது இளைஞர் சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுமாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். (த-20)

## தபால்மூல...

ளிப்பு நடைபெறும் என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது. (த)

## கொரோனா பெருந்தொற்றின் பின்னரான

# இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு பாடசாலைகளில் முழுவதுமாகத் தடை!

### மறு அறிவித்தல்வரை நடைமுறையாகும் என்று கல்வி அமைச்சு அறிவுறுத்தல்

**கொடிகாமம், ஜூன் 17**

**கொரோனா பெருந்தொற்றின் பின்னர் பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது கல்விச் சுற்றுலா, விளையாட்டுக்கள் உள்ளிட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு கல்வி அமைச்சு தடைவிதித்துள்ளது.**

கொரோனா பெருந்தொற்றின் பின்னர் பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றி கல்வி அமைச்சு சிறப்பு சுற்றறிக்கை விடுத்துள்ளது. மாணவர்களின் ஓய்வுநேரம், சமூக இடைவெளி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நாட்டில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும்போது மாணவர்கள் ஒன்றுகூடுதல் அல்லது குழுவாக இணைந்து செயற்படுவதற்கு தடைவிதிக்கப்படுகின்றது. இதற்கமைய பாடசாலை மாணவர்களுக்கு ஓய்வு நேரத்தை ஒரே நேரத்தில் வழங்காமல் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு வகுப்பறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றக்கூடிய அளவில் மாணவர்களை இணைத்துக் கொள்ளவேண்டும். பாடசாலைகளை ஆரம்பிக்கும்போதும் முடிக்கும்போதும் மாணவர்கள் ஒன்றுகூடுவதற்கு இடமளிக்க வேண்டாம். மாணவர்கள் இருவருக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளியை வைத்துக் கொள்வதற்காக வகுப்பறைகளை மாற்ற வேண்டும். வகுப்பறையின் இடவசதியை மீறி செல்லாத வகையில் ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்துடன் பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டு, கல்வி சுற்றுலா, மாணவர்கள் ஒன்றுகூடி மேற்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரும்வரையில் தடை செய்யப்படுகின்றன - என்றுள்ளது.

(ம-159)

## ஆலயங்கள் திறந்தமை 'லேற்றஸ்' புதுமைதான்!

### கூறுகின்றார் குரு முதல்வர்

**தலைமன்னார், ஜூன் 17**

புதுமை செய்பவரில் பெயர்போன புனித அந்தோனியாரின் 'லேற்றஸ்' புதுமை கடந்த சில மாதங்களாக பக்தர்கள் ஆலயம் சென்று வழிபாடுகள் செய்ய முடியாது இருந்தபொழுதும் அவரின் பெருவிழாவை அனைத்து இடங்களிலும் கொண்டாட முதல்நாளே பக்தர்கள் ஆலயம் சென்று வழிபட ஆலயங்கள் திறக்கப்பட்டன. இது புனித அந்தோனியாரின் 'லேற்றஸ்' புதுமைகளில் ஒன்று.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மடு மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்பணி ச.சத்தியராஸ் அடிகளார்.

மன்னார் மறைமாவட்ட அடம்பன் நெடுங்கண்டல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத் தந்தை அருட்பணி தி.நவரட்ணம் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. அதில் மடு மறைக்கோட்ட குரு முதல்வர்திருப்பலி ஒப்புக்கொடுக்கும் மறையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புனித அந்தோனியார் தலைசிறந்த ஒரு போதகர் இவர் நற்கருணையின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இவரின் வரலாற்றில் புனித அந்தோனியார் நற்கருணையை தனது கையில் பிடித்துக் கொண்டிருந்தபோது கழுதை இதன் முன் முழந்தால் படியிட்டது என்று பார்க்கின்றோம். புனித அந்தோனியாரின் புதுமைகள் அதிகம் - என்று மேலும் தெரிவித்தார்.

(து-60)

# பரீட்சை முடிவுகளை பார்வையிட முடியும்!

**யாழ்ப்பாணம், ஜூன் 17**

வடக்கு மாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தால் நடத்தப்பட்ட 2018/2019 கல்வி ஆண்டுக்குரிய பி பிரிவு சிங்கள மொழிக்கற்கை மாணவர்களுக்கான முதலாம் தவணை இறுதிப் பரீட்சை முடிவுகளை மும்மொழிக் கற்கை நிலையத்தில் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் டிப்ளோமா கற்கை நெறியை தொடர்வதற்கான விண்ணப்பங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என மும்மொழிக் கற்கை நிலைய பணிப்பாளர் பி.என்.சுதர்ஷன் தெரிவித்துள்ளார்.

(ம)

**வீடு வாடகைக்கு உண்டு**

ஆடியபாதம் வீதியில், யாழ் மருத்துவ பீடத்திற்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் பல்கலைக்கழக, அரச உத்தியோகத்தருக்கு முன்னுரிமை. தரகர் தேவையில்லை. விருப்பமுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **0777 283 692**

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் நகர்பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. ஈச்சமோட்டை, சுண்டுக்குளி, கொழும்புத்துறை, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளில் விரும்பத்தக்கது.

தொடர்பு: **070 356 7811**

## மரண அறிவித்தல்

### திருமதி சதாசிவம் பரமேஸ்வரி



**தோற்றம்:** 02.06.1933 **மறைவு:** 16.06.2020

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் பரமேஸ்வரி நேற்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் சிவமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் மகேஸ்வரி (குஞ்சு) ஆகியோரின் சகோதரியும், உமாதேவி, சுகந்தி, சுமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஸ், சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்வநல்லம்மா (செல்வா), காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சதுர்ராமன்- துளசினி, சதுர்ணாதேவி, சதுர்த்தினி, யஸ்வினி, வினுஷன், துஷாரிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2020) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சுரேஸ்-0774196946**
**(ஹரன் புடைவையகம்)**
சுமதி - **021 221 2245, 021 222 0121**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# 25லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைதானார்!

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 25 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. அவரிடம் இருந்து 160 லீற்றர் கோடாவும், கசிப்பை உற்பத்திசெய்யப் பயன்படுத்தும் மேலும் சில பொருள்களும் மீட்கப்பட்டன.

(ம-113)

# புலம்பெயரிகள் நிதியில் குழாய்க் கிணறு

**வவுனியா, ஜூன் 17**

வவுனியா சண்முகபுரத்தில் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.



சமூக செயற்பாட்டாளர் விநாயகமூர்த்தி விநோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சண்முகலிங்கம் கலந்துகொண்டு குறித்த குழாய்க் கிணறை மக்கள் பாவனைக்குக் கையளித்தார்.

இத்தாலி மனிதநேய சங்கத்தின் பொறுப்பாளர் மகேஸ்வரநாதன் கிருபாகரனின் ஒழுங்கமைப்பில் 'ரிசா சாறி சுவிஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் பாஸ்கரன் செல்வியின் நிதி உதவியில் குறித்த குடிதண்ணீர் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. (ம-110)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.